
# சோதிடமலர்

# SOTHIDA MALAR



உள்ளே..........

★ இலங்கை இந்தியப் பேச்சுவார்த்தை பலனளிக்குமா?

★ கிரக பார்வை

★ செவ்வாய் தோஷம்

★ அதிஷ்ட எண் ஞானம்

★ கிரக சம்பாஷணை

இன்னும் பல,

ருதிரோற்காரி கார்த்திகை மீ (17-11-83 — 15-12-83) ரூ: 3·00

சூர்யோ யச்சது பூபதாம் த்விசபதி
ப்ரீதிம் பராம் தன்வதாம்
மாங்கல்யம் விததாது பூமிதநயோ
புத்திம் விதத்தாம் புத;
கௌரம் கௌரவமாதனோது ச குரு;
சுக்ர ச சுக்கிரார்த்ததத;
சௌரி வைரிவிநாசனம் விதனுதாம்
லோககக்ஷயம் சைம்ஹிக;

மறைகளின் முடிவால் வாக்கால் மனத்தினுலளக்
— கொணுமல்
நிறைவுடன் யாண்டுமாகி நின்றிரு நிமலமூர்த்தி
அறுமுக உருவாய்த் தோன்றி அருளொடு
— சரவணத்தின்
வெறிகமழ் கமலப் போதின் விற்றிருந்தருளினுனே

## சாமான்ய தர்மங்கள்

தானம், சந்தியாவந்தனம், யாகம், பூஜை, வழிபாடு பரோபகாரம் இவையெல்லாம் நல்லனவற்றில் மனதைச் செலுத்தும் பகிரங்க சாதனங்களாகும்.

தியானம் என்பது மிகச் சிறந்த மனசை அடக்கும் அந்தரங்க சாதனமாகும். இதற்கு அனுகூலமாக அஹிம்சை, சத்யம், அஸ்தேயம், சௌசம், இந்திர நிக்ரஹம் என்பன மனிதனுல் கைக்கொள்ளப்பட வேண்டியனவாகும். எவருக்கும் எவற்றுக்கும் கெடுதல் எண்ணுது அன்பு மயமாகச் செய்வது அஹிம்சை. மனம், வாக்கு, காயம் மூன்றையும் உண்மையில் ஈடுபடுத்துவது சத்யம். பிறர் பொருளில் ஆசை கொள்ளாது வைராக்கியமாக இருத்தல் (திருட ாமலிருத்தல்) அஸ்தேயம். ஸ்நானம் ஆசாரம் உணவுச் சுத்தம் இவற்றினுல் மனதையும் உடலையும் தூம்மையாக்குவது சௌசம். புலன்களை அளவுக்கதிகமாக, தன்போக்கில் விடாது அடக்குதல் இந்திரிய நிக்ரஹகம். முன் கூறிய பகிரங்க சாதனங்களாலும் பின் கூறிய அந்தரங்க சாதனங்களாலும் மனத்தை முதலில் ஒருமுகப்படுத்தி பின்பு ஒன்றையுமே நினைக்காத நிலைக்கு வரவேண்டும். இந்நிலையிலேயே ஆத்ம சிந்தனை கூடி பரமாத்மபாவனை உண்டாகிறது. இவற்றிற்கு அடிப்படையானவே இச்சாமான்யதர்மங்களாகும்.


# சோதிடமலர்
SOTHIDA MALAR

சோதிட மாத சஞ்சிகை

ஆசிரியர்:
பிரம்மஸ்ரீ கி. சதாசிவ சர்மா
(சம்ஸ்கிருத பண்டிதர்)

ருதிரோற்காரி ஸூ கார்த்திகை மீ
( 17 - 11 - 83 )

மலர் 6 | இதழ் 8


## இவ்விதழில் ......................


| | | பக்கம் |
|---|---|---|
| 1 | நான் எப்படி ... | 2 |
| 2 | உதயலக்கினம் காணும் பதகம் ... | 4 |
| 3 | கார்த்திகை மாதக் கிரகநிலை ... | 5 |
| 4 | கால ஹோரைகள் ... | 9 |
| 5 | கார்த்திகை மாத வானியற்காட்சி ... | 7 |
| 6 | இம்மாதம் உங்களுக்கு எப்படி? ... | 8 |
| 7 | அதிஷ்ட எண் ஞானம் ... | 17 |
| 8 | திருமணங்கள் சொர்க்கத்தில் ... | 19 |
| 9 | செவ்வாய் தோஷம் ... | 21 |
| 10 | இலங்கை - இந்தியப் பேச்சுவார்த் ... | 23 |
| 11 | கிரக பார்வை ... | 25 |
| 12 | கிரக சம்பாஷணை ... | 27 |
| 13 | சந்தேக நிவிர்த்தி ... | 28 |
| 14 | மணப்பந்தல் ... | 30 |
| 15 | வாசகர்கருத்து ... | 31 |
| 16 | குறுக்கெழுத்துப் போட்டி ... | 32 |

# நாள் எப்படி ?

கார் 1 வியா (17-11-83) துவாதசி மாலை 6-05 வ. ரேவதி. பி. இ. 3-38 வரை சித்தாமிர்தம் பொதுவாக சுபகருமங்கள் எல்லாம் செய்யலாம். இராகு 1-38—3-08.

கார் 2 வெள் (18-11-83) திரயோதசி மாலை 6-38 வரை. அசுவினி பி. இ. 4-32 வரை அமிர்தசித்தம் பிரதோஷ விரதம். மாலை சிவதரிசனத்தால் பாவங்கள் நீங்கும். மாலை 6-38 வரை சுபகருமங்கள் செய்யலாம். ராகு 10-38—12-08.

கார் 3 சனி (19-11-83) சதுர்த்தசி மாலை 6-35 வ. பரணி பி. இ. 4-52 வரை சித்தாமிர்தம். அன்றாட பணிகளை மட்டும் செய்யவும். ராகு 9-09—10-39.

கார் 4 ஞாயி (20-11-83) பூரணை மாலை 6-00 வரை கார்த்திகை பி. இ 4-42 சித்தம். பூரணை விரதம், திருக்கார்த்திகை விரதம், சர்வாலய தீபம், குமராலய தீபம். இன்று இறைவனை சோதிவடிவாக தரிசித்து அருள்பெறலாம். சுபகருமங்களை விலக்குக. ராகு 4-39 — 6-09.

கார் 5 திங் (21-11-83) பிரதமை மாலை 4-57 வ. ரோகிணி. பி. இ. 4-07 வரை அமிர்த சித்தம். விநாயக விரதாரம்பம், விஷ்ணு தீபம். எல்லா சுப கருமங்களும் செய்ய நன்று. ராகு 7-39 — 9-09.

கார் 6 செவ் (22-11-83) துவிதியை பி. ப. 3-29 வ. மிருகசீரிடம் - சித்தம் பி. இ. 3-22 வரை. தோட்டத் தொழில்கள் செய்ய நன்று. ராகு 3-10--4-40.

கார் 7 புத (23-11-83) திரிதியை பகல் 1-47 வரை திருவாதிரை பி.இ. 2-01 வரை சித்தம். சுப கருமங்களுக்கு ஏற்ற தினமன்று. ராகு12-10–1-40

கார் 8 வியா (24-11-83) சதுர்த்தி பகல் 11-50 வரை புனர்பூசம் இரவு 12-41 வரை அமிர்த சித்தம், பகல் 11-50 இன் மேல் நற்கருமங்கள் செய்க. ராகு 1-40—3-10.

கார் 9 வெள் (25-11-83) பஞ்சமி பகல் 9-47 வரை பூசம் இரவு 11-15 வரை மரணம் சுபகருமங்களை நீக்குக. ராகு 10-41—12-11.

கார் 10 சனி (26-11-83) ஷஷ்டி காலை 7-36 வ. அதன்மேல் சப்தமி பி.இ. 5-24 வரை ஆயிலியம் —மரணம் இரவு 9-46 வரை அவசிய கருமங்களை இரவு 9-46 இன் மேல் செய்க. ராகு 9-11–10-41

கார் 11 ஞா (27-11-83) அஷ்டமி பி.இ. 3-17 வரை மகம்—மரணம் இரவு 8-19 வரை அஷ்டமி நவமி. ராகு 4-41—6-11.

கார் 12 திங் (28-11-83) நவமி இரவு 1-14 வரை பூரம் மாலை 6-56 வரை சித்தம் சுபகருமங்களை நீக்குக. ராகு 7-42—9-12.

கார் 13 செவ் (29-11-83) தசமி இரவு 11-19வ, உத்தரம் மாலை 5-40 வரை அமிர்த சித்தம். தோட்டத் தொழில் செய்ய நன்று. ராகு 3-13—4-43.

கார் 14 புத (30-11-83) ஏகாதசி இரவு 9-36வ. அத்தம் மாலை 4-33 வரை சித்தம் சர்வ ஏகாதசி விரதம் எல்லா சுபகருமங்களுக்கும் நன்று. ராகு 12-13—1-43.

கார் 15 வியா (1-12-83) துவாதசி—மரணம் இ. 8-08 வரை சித்திரை பி.ப. 3-42 வரை இரவு 8-08 இன் பின் நற்கருமங்கள் செய்யலாம். ராகு 1-44—3-14.

கார் 16 வெ (2-12-83) திரயோதசி இரவு 6-59 வரை சுவாதி பி.ப. 3-08 வரை சித்தம் பிரதோஷ விரதம் பி.ப. 3-08 வரை புதிய கருமங்கள் செய்ய நன்று. ராகு 10-45—12-15.

கார் 17 சனி (3-12-83) சதுர்த்தசி மாலை 6-14 வரை விசாகம் பி.ப. 2-55 வரை சித்தம். சுப கருமங்களை விலக்குக. ராகு 9-15—10-45.

கார் 18 ஞா (4-12-83) அமாவாசை மாலை 5-56 வரை அனுஷம் பி.ப, 3-12 வரை மரணம். அமாவாசை விரதம் சுபகருமங்களை விலக்குக. ராகு 4-45—6-15.

கார் 19 திங் (5-12-83) பிரதமை மாலை 6-10 வ. கேட்டை மாலை 4-00 மணி சித்தம். அவசிய கருமங்களை மாலை 4-00 மணிக்குப் பின் செய்யவும். ராகு 7-46—9-16.

கார் 20 செவ் (6-12-83) துவிதீயை இரவு 6-58 வரை மூலம் மாலை 5-14 வரை அமிர்த சித்தம் மாலை 5-14 வரை தோட்டத்தொழில் மட்டும் செய்யலாம். ராகு 3-17—4-47.

கார் 21 புத (7-12-83) திரிதீயை இரவு 8-18வ. பூராடம் இரவு 7-03 வரை அமிர்தம். மத்திம சுபதினம் ராகு 12-17—1-47.

கார் 22 வியா (8-12-83) சதுர்த்தி இரவு 10-08 வரை உத்தராடம் இரவு 6-20 வரை சித்தம் சதுர்த்தி விரதம் மத்திம சுபதினம். ராகு 1-47-3-17

கார் 23 வெள் (9-12-83) பஞ்சமி இரவு 12-24 வரை சுபகருமங்களுக்கு ஏற்ற தினமன்று. ராகு 10-48—12-18.

கார் 24 ச[illegible] (10-12-83) ஷஷ்டி—சித்தம் இரவு 2-54 வ[illegible] அவிட்டம் இரவு 2-58 வரை விநாயக ஷஷ்டி விரதம் பொதுவாக சுபகருமங்கள் செய்யலாம். ராகு 9-19—10-49.

கார் 25 ஞா (11-12-83) ஸப்தமி பி.இ. 4-47 வ. சதயம் பி.இ. 5-57 வரை சித்தம் நற்கருமங்கள் செய்யலாம். ராகு 4-49—6-19.

கார் 26 திங் (12-12-83) அஷ்டமி—பூரட்டாதி—மரணம் நாள் முழுவதும். திருவெம்பாவை பூஜாரம்பம் சுபகருமங்களை நீக்குக. ராகு 7-50—9-20.

கார் 27 செவ் (13-12-83) அஷ்டமி காலை 7-48 வரை பூரட்டாதி — மரணம் காலை 8-44 வரை சுபகருமங்களை தவிர்க்கவும். ராகு 3-20—4-50

கார் 28 புத (14-12-83) நவமி காலை 9-44 வரை உத்தரட்டாதி-சித்தம் பகல் 12-01 வரை அவசிய கருமங்களை பகல் 9-44—12-09 இற்குள் செய்யலாம். ராகு 12-21—1-51

கார் 29 வியா (15-12-83) தசமி பகல் 11-06 வ. ரேவதி. பகல் 12-57 வரை சித்தாமிர்தம். புதிய கருமங்கள் செய்ய நன்று. ராகு 1-51 3-21

# இம்மாத விசேடம்

## கார்த்திகைத் தீபம்

கார்த்திகைப் பௌர்ணமியன்று, சந்திரன் கார்த்திகை நட்சத்திரத்தில் சேரும் தினத்தில் பஞ்சபூதங்களில் அக்கினியைச் சிறப்பாகத் திருப்தி செய்வது இவ்விரத விழாவின் தனிப்பெரு நோக்கும் சிறப்புமாகும். திருவண்ணுமலையில் பிரம்ம விஷ்ணுக்களின் அறியாமையை நீக்கத்தோன்றிய ஒளிப்பிழம்பே பரமேஸ்வரனின் திவ்ய தர்சனமாகும். இதைக்கருத்திற் கொண்டே தீபங்களின் ஏற்றமும் சொக்கப்பானை என்றும் ஒளிக்கூட்டத்தின் காட்சியும் நடைபெறுகிறது. புறத்தில் ஒளிதோன்றி இருள் நீங்குவதுபோல பொது அகத்தில் அறியாமை இருள் நீங்கி அருள் ஒளி யேற்படுகிறது. இதையே அப்பர் சுவாமிகளும்

"அல்லல் தீர்க்கும் அண்ணுமலை கைதொழ
நல்லன ஆயின, நம்மையடையுமே"

என அறிவுறுத்துகிறுர்.

## சோமவார விரதம்

நிலவுலாகிய நீர் மலிவேணியனுகிய சிவபெருமானுக்கு மிகவும் உவப்பான விரதம் சந்திரனுக்குரியதான சோமவார விரதமாகும். கார்த்திகை மாத முதலாஞ்சோமவாரம் (திங்கட்கிழமை)முதல் சிவனைக்குறித்து பன்னிரண்டு வருடம், மூன்று அல்லது ஒரு வருடம்முழுவதுமாவது அனுட்டிக்க வேண்டிய இவ்விரதம் இயலாத தன்மையின் பொருட்டு கார்ததிகைமாதத்தில் வரும் சோமவாரங்களிலாவது நிச்சயம் அனுட்டிக்கப்பட வேண்டும். அன்று உபவாசம் மறுநாள் பாரணை அல்லது பகல் விரதமிருந்து இரவில் ஒருபோது மட்டும் போசனம் செய்தல், அதாவது பகலில் பதினைந்து நாழிகையின் பின் ஒருபோது உணவருந்துதல் என இயல்புக்கேற்றவாறு அனுட்டிக்கலாம். இத்தினத்தில் நீராடி நித்திய கருமங்கள் முடித்து பூஜை வழிபாடாற்றி, பிராமணத்தம்பியரை அழைத்து அவ்விருவரையும் சிவனுகவும் உமாதேவியாகவும் பாவித்து வஸ்திரமளித்து தானங்கொடுத்து பூஜிக்கலாம். சிவபூஜை செய்ய முடியாதவர்கள் சிவ ஆலயம் சென்று பஞ்சாமிர்தத்தினுல் விசேடமாக சிவனை அபிஷேகித்து பிராமணபோசனம் செய்வித்து அடியார்களுக்கு அன்னதானம் செய்து பின் ஒருவேளையுணவுட்கொள்ளலாம். இவற்றினுல் சகல சௌபாக்கியங்களையும் பெற்று சிறப்பாக வாழலாம்.

## பிள்ளையார் கதை:

விநாயக ஷஷ்டி எனவும், பெருங்கதை என்றும் அழைக்கப்படும் இவ்விரதம் கார்த்திகை மாத கிருஷ்ண பக்ஷப்பிரதமை முதல் மார்கழி மாதச் ஷஷ்டிவரையுள்ள தினங்களும் (இருபத்தொருநாளும்) கொள்ளப்படுவதாகும். இவ்விரத காலங்களில் இருபத்தொரு இழைகளாலான காப்புக்கட்டிக் கொள்வர். இருபது தினங்களும் ஒரு பொழுதுண்டு இறுதி நாள் உபவாசமிருந்து பெருங்கதை என்னும் விநாயகருடைய பெருமைகளைக் கேட்டு, கரும்பு மிளநீரும் காரெள்ளும் தேனும் விரும்புமவல் பழமும் நிவேதனம் செய்து வழிபடுவதால் எப்பொழுதும் வாராது கூற்று.


## உதயலக்னம் காணும் பதகம் (யாழ்ப்பாணம்)

ருதிரோற்காரி ஹு கார்த்திகை மீ 1-ந் தேதி முதல் 29-ந் தேதி வரை. (17-11-83 முதல் 15-12-83 வரை)

| இங் நவ | தமி கார் | வாரம் | விருச்சி ம.மி. முதல் (காலை) | விருச்சி ம.மி. வரை | தனுசு ம. மி. வரை (காலை) | மகரம் ம. மி. வரை (பகல்) | கும்பம் ம. மி. வரை (பகல்) | மீனம் ம. மி. வரை (பி.ப) | மேடம் ம. மி. வரை (மாலை) | இடபம் ம. மி. வரை (இரவு) | மிதுனம் ம. மி. வரை. (இரவு) | கடகம் ம. மி. வரை (இரவு) | சிங்கம் ம. மி. வரை (பி.இ) | கன்னி ம. மி. வரை (பி.இ) | துலாம் ம. மி. வரை) (பி.இ) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 17 | 1 | வியா | 6 08 | 8 16 | 10 24 | 12 20 | 2 05 | 3 48 | 5 37 | 7 40 | 9 51 | 11 58 | 1 59 | 3 58 | 6 02 |
| 18 | 2 | வெள் | 6 02 | 8 11 | 10 19 | 12 15 | 2 00 | 3 43 | 5 32 | 7 35 | 9 46 | 11 53 | 1 54 | 3 53 | 5 57 |
| 19 | 3 | சனி | 5 57 | 8 08 | 10 16 | 12 12 | 1 57 | 3 40 | 5 28 | 7 32 | 9 43 | 11 50 | 1 51 | 3 50 | 5 54 |
| 20 | 4 | ஞாயி | 5 54 | 8 04 | 10 12 | 12 08 | 1 53 | 3 36 | 5 24 | 7 29 | 9 39 | 11 46 | 1 47 | 3 46 | 5 50 |
| 21 | 5 | திங் | 5 50 | 8 00 | 10 08 | 12 04 | 1 49 | 3 32 | 5 20 | 7 25 | 9 35 | 11 42 | 1 43 | 3 42 | 5 46 |
| 22 | 6 | செவ் | 5 46 | 7 56 | 10 04 | 12 00 | 1 45 | 3 28 | 5 16 | 7 21 | 9 31 | 11 38 | 1 39 | 3 38 | 5 42 |
| 23 | 7 | புதன் | 5 42 | 7 52 | 10 00 | 11 56 | 1 41 | 3 24 | 5 12 | 7 17 | 9 27 | 11 34 | 1 35 | 3 34 | 5 38 |
| 24 | 8 | வியா | 5 38 | 7 48 | 9 56 | 11 52 | 1 37 | 3 20 | 5 08 | 7 13 | 9 23 | 11 30 | 1 31 | 3 30 | 5 34 |
| 25 | 9 | வெள் | 5 34 | 7 44 | 9 52 | 11 48 | 1 33 | 3 16 | 5 04 | 7 09 | 9 19 | 11 26 | 1 27 | 3 26 | 5 30 |
| 26 | 10 | சனி | 5 30 | 7 40 | 9 48 | 11 44 | 1 29 | 3 12 | 5 00 | 7 03 | 9 15 | 11 22 | 1 23 | 3 22 | 5 26 |
| 27 | 11 | ஞாயி | 5 26 | 7 35 | 9 43 | 11 39 | 1 24 | 3 07 | 4 55 | 6 58 | 9 10 | 11 17 | 1 18 | 3 17 | 5 21 |
| 28 | 12 | திங் | 5 21 | 7 30 | 9 38 | 11 34 | 1 19 | 3 02 | 4 50 | 6 53 | 9 05 | 11 12 | 1 13 | 3 12 | 5 16 |
| 29 | 13 | செவ் | 5 16 | 7 28 | 9 36 | 11 32 | 1 17 | 3 00 | 4 48 | 6 51 | 9 3 | 11 10 | 1 11 | 3 10 | 5 14 |
| 30 | 14 | புதன் | 5 14 | 7 24 | 9 32 | 11 28 | 1 13 | 2 56 | 4 44 | 6 47 | 8 59 | 11 6 | 1 7 | 3 06 | 5 10 |
| டிசம் 1 | 15 | வியா | 5 10 | 7 21 | 9 29 | 11 25 | 1 10 | 2 53 | 4 41 | 6 44 | 8 56 | 11 3 | 1 4 | 3 03 | 5 07 |
| 2 | 16 | வெள் | 5 07 | 7 17 | 9 25 | 11 21 | 1 06 | 2 49 | 4 37 | 6 40 | 8 52 | 10 59 | 1 0 | 2 59 | 5 03 |
| 3 | 17 | சனி | 5 03 | 7 12 | 9 20 | 11 16 | 1 01 | 2 44 | 4 32 | 6 35 | 8 47 | 10 54 | 12 55 | 2 54 | 4 58 |
| 4 | 18 | ஞாயி | 4 58 | 7 08 | 9 16 | 11 12 | 12 57 | 2 40 | 4 28 | 6 31 | 8 43 | 10 50 | 12 51 | 2 50 | 4 54 |
| 5 | 19 | திங் | 4 54 | 7 05 | 9 13 | 11 09 | 12 54 | 2 37 | 4 25 | 6 28 | 8 40 | 10 47 | 12 48 | 2 47 | 4 51 |
| 6 | 20 | செவ் | 4 51 | 7 01 | 9 09 | 11 05 | 12 50 | 2 33 | 4 21 | 6 24 | 8 36 | 10 43 | 12 44 | 2 43 | 4 47 |
| 7 | 21 | புத | 4 47 | 6 57 | 9 05 | 11 01 | 12 46 | 2 29 | 4 17 | 6 20 | 8 32 | 10 39 | 12 40 | 2 39 | 4 43 |
| 8 | 22 | வியா | 4 43 | 6 53 | 9 01 | 10 57 | 12 42 | 2 25 | 4 13 | 6 16 | 8 28 | 10 35 | 12 36 | 2 35 | 4 39 |
| 9 | 23 | வெள் | 4 39 | 6 49 | 8 57 | 10 53 | 12 38 | 2 21 | 4 09 | 6 12 | 8 24 | 10 31 | 12 32 | 2 31 | 4 35 |
| 10 | 24 | சனி | 4 35 | 6 45 | 8 53 | 10 49 | 12 34 | 2 17 | 4 05 | 6 08 | 8 20 | 10 27 | 12 28 | 2 27 | 4 31 |
| 11 | 25 | ஞாயி | 4 31 | 6 42 | 8 50 | 10 46 | 12 31 | 2 14 | 4 02 | 6 05 | 8 17 | 10 24 | 12 25 | 2 24 | 4 28 |
| 12 | 26 | திங் | 4 27 | 6 37 | 8 45 | 10 41 | 12 26 | 2 09 | 3 57 | 6 00 | 8 12 | 10 19 | 12 20 | 2 19 | 4 23 |
| 13 | 27 | செவ் | 4 23 | 6 33 | 8 41 | 10 37 | 12 22 | 2 05 | 3 53 | 5 56 | 8 08 | 10 15 | 12 16 | 2 15 | 4 19 |
| 14 | 28 | புதன் | 4 19 | 6 30 | 8 38 | 10 33 | 12 18 | 2 01 | 3 49 | 5 52 | 8 04 | 10 11 | 12 12 | 2 11 | 4 15 |
| 15 | 29 | வியா | 4 15 | 6 25 | 8 33 | 10 28 | 12 13 | 1 56 | 3 45 | 5 48 | 8 0 | 10 8 | 12 7 | 2 06 | 4 10 |

*இப்பதகத்தின் உதவியுடன் ஒரு குழந்தை ஜனனமான நேரத்துக்குரிய இலக்கினத்தை இலகுவில் அறிந்து கொள்ளலாம்.
உ-ம்: கார் 29உ (15-12-83) பகல் 12-30 மணிக்கு என்ன லக்னம்? தடித்த எழுத்திலுள்ளதை கவனிக்க. (12-13 — 1-56) மீனலக்னம்

# கார்த்திகை மாதக் கிரகநிலை




## கிரக மாற்றங்கள்

14வ (30-11-83) காலை 6-19க்கு தனு-புத

15வ (1-12-83) காலை 8-10க்கு துலா-சுக்

7வ புதன் உதயம்

17வ குரு அஸ்தமனம்

## சந்திரனது இராசிநிலை

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| கார்த் | 1வ | (17-11-83) | பி.இ. | 3-38 | முதல் | மேடம் |
| | 4வ | (20-11-83) | காலை | 10-51 | ,, | இடபம் |
| | 6வ | (22-11-83) | பகல் | 3-41 | ,, | மிதுனம் |
| | 8வ | (24-11-83) | மாலை | 7-01 | ,, | கடகம் |
| | 10வ | (26-11-83) | இரவு | 9-46 | ,, | சிங்கம் |
| | 12வ | (28-11-83) | பி. இ. | 12-35 | ,, | கன்னி |
| | 14வ | (30-11-83) | பி.இ. | 4-05 | ,, | துலாம் |
| | 17வ | (3-12-83) | காலை | 8-57 | ,, | விருச்சிகம் |
| | 19வ | (5-12-83) | பகல் | 5-57 | ,, | தனுசு |
| | 21வ | (7-12-83) | பி.இ. | 1-35 | ,, | மகரம் |
| | 24வ | (10-12-83) | பகல் | 1-30 | ,, | கும்பம் |
| | 26வ | (12-12-83) | பி.இ. | 2-03 | ,, | மீனம் |
| | 29வ | (15-12-83) | பகல் | 12-57 | ,, | மேடம் |

### கிரகநிலை குறிக்க:-

* 4-ம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள பதகத்தின்படி கார்த்தி மீ 29வ பகல் 12-30 மணிக்கு மீன லக்னம் என அறிந்து கொண்ட பின் மீனம் என்ற கூட்டில் 'ல'என்று குறித்துக் கொள்ளவும். கிரகநிலையை அனுசரித்து மாற்றமடைந்த கிரகங்களையும் கவனித்து கிரக நிலை குறிக்கவும். லக்னம் முதல் வலமாக 1முதல் 12 வரை இலக்கமிடுக,

**மாதபலன்**

இம்மாதம் தேசிய பொருளாதரத்தில் சிறு முன்னேற்றங்கள் தென்படும். அரசியல்ரீதியில் மனவேறுபாடுகள் உண்டாகும். வரண்ட பிரதேசங்களில் கதிர்த்தானிய விளைவு மத்திமமாகும். வியாபாரத்துறை விருத்திபெறும். பலவகையிலும் மக்களிடையே வரி முதலிய செலவினங்கள் மிகும். நோய்கள் பரவுதற்கும் இடமுண்டு.

# நலந்தரும் கால ஹோரைகள்.

**சூரிய ஹோரை:-** உத்தியோகம், வியாபாரம் செய்ய, அரசாங்கத்திடம் சலுகைபெற, பெரிய உத்தியோகத்தரைக் காண, அரசாங்க அலுவல்கள் தொடங்க,' பிதா வர்க்கத்தாருடன் பேச்சுக்கள் நடத்த நலம்.

**சந்திர ஹோரை:-** ஸ்திரீகளைப்பற்றிப் பேசுவது, கேள்விகள் கேட்பது, கவர்ச்சியான பேச்சுக்களை ஆரம்பிக்க, மாதாவர்க்கத்தாருடன் பேச உசிதம். தோம்பு சம்பந்தப்பட்ட நீண்டகால விஷயங்கள் இதில் செய்யக்கூடாது.

**செவ்வாய் ஹோரை:-** உள்ளக்கருத்துக்களை மறைமுகமாகவைப்பது நலம். பூமிச்செய்கைகள் (மண்ணைக் கிண்டுதல், கொத்துதல் போன்றன) செய்ய, போருக்குப்புறப்பட, ஓமம், அக்கினி சம்பந்தமான வேலை ஆரம்பிக்க, உடற்பயிற்சி முதலியனவற்றிற்கு நன்று.

**புதன் ஹோரை:-** வதந்திகள் அனுப்பவும், எழுத்து வேலைகளுக்கும், பரீக்ஷை எழுதவும், ஆராய்ச்சிகள் செய்யவும், வானொலித் தொடர்புகள் கொள்ளவும், புத்தகம் எழுதவும், வெளியிடவும் நன்று.

**குரு ஹோரை:-** எல்லாவற்றிற்கும் நலம். பணக்காரர் தயவை நாடுவது, எல்லாச் சாமான்களையும் வாங்குவது, உத்தியோகங்கள், பணவிஷய விவரங்களைத் தொடங்க, ஆடை ஆபரணங்கள் சேர்க்க, காரியங்கள் தடையின்றி நடக்கக் கடன்களைப் பெறுவது, ஷராப் வியாபாரிகளுக்கும் விவசாய லாபங்களுக்கும் இந்த ஹோரை மிகவும் சிறந்தது. விருந்துக்கு நல்லதல்ல.

**சுக்கிர ஹோரை:-** சுபவேலைகள் நடத்த, பெண்களைப்பற்றிப்பேச, இன்பக்கேளிக்கைகள், விவகப்பேச்சு, பெண்களுடன் உரையாடல், பொன்னுபரணங்கள், வாகனங்கள் கொள்வனவு செய்தல் இன்பக்கலைகள் தொடங்குதல், சோடனை வேலைகள் ஆரம்பித்தல் முதலியனவற்றிற்கு சிறந்தது.

**சனி ஹோரை:-** இவ்வோரை மிகக் கொடியது. இருந்தபோதிலும் நிலங்கள், அவை சம்பந்தப்பட்ட சொத்துக்கணிப்பற்றி நடவடிக்கை எடுக்க, தோம்பு துறவுகளைப்பற்றிப் பேசவும் நல்லது.

## (கார்த்திகை மாதம் 1-ந் தேதி முதல் 29-ந் தேதி வரை)

(சூரிய உதயம் 6 மணி 08 நிமிஷம்)

| வாரம் | 6...08 7...08 | 7...08 8...08 | 8...08 9...08 | 9...08 10...08 | 10...08 11...08 | 11...08 12...08 | 12...08 1...08 | 1...08 2...08 | 2...08 3...08 | 3...08 4...08 | 4...08 5...08 | 5...08 6...08 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **பகல்** | | | | | | | | | | | | |
| ஞாயி | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி |
| திங்க | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய |
| செவ் | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி |
| புதன் | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் |
| வியா | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் |
| வெள் | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு |
| சனி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி |
| **இரவு** | | | | | | | | | | | | |
| ஞாயி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் |
| திங்க | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு |
| செவ் | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி |
| புதன் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி |
| வியா | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய |
| வெள் | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி |
| சனி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் |

**குறிப்பு:-** நீங்கள் செய்யவேண்டிய கருமம் என்ன, எந்த ஹோரையில் செய்வது நலம் என்பதை மேலே உள்ள குறிப்புகளில் ஆராய்ந்து குறிப்பிட்ட ஹோரை வரும் நேரத்தைப் பதகத்தில் பார்த்து அந்தநேரத்தில் குறிப்பிட்ட கருமத்தைச் செய்யவும். நிச்சயம் அனுகூலமாகும்.

யாழ். வானியற்கழகம்
167, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

வெளியீடு இல. 40

# கார்த்திகை மாத வானியற் காட்சிகள்

# ASTRONOMICAL PHENOMENA

17-11-83 — 15-12.83

சூரியன்: 16-11-83 இரவு மணி 7-09ல் (நிரயன) விருச்சிக ராசிப் பிரவேசம்.
18-11-83 உதயம் காலை 6-08
அஸ்தமனம் மாலை 5-42
15-12-83 உதயம் காலை 6-21
அஸ்தமனம் மாலை 5-48

சந்திரன்: 20-11-83 பூரணை மாலை 6-00
27-11-83 அபர அஷ்டமி இரவு 3-17
4-12-83 அமாவாசை மாலை 5-56
6-12-83 சந்திர தர்சனம்
13-12-83 பூர்வ அஷ்டமி காலை 7-48

## கிரகங்கள்

புதன்: சென்ற மாதம் அஸ்தமனமாயிருந்த இக்கிரகம் 23-11-83ல் மேற்கில் உதயமாகிறது. அதன்பின் மேற்கு வானில் அஸ்தமனத்தின் பின் அவதானிக்கலாம். அதன் அடிவான உயரம் அன்றிலிருந்து சிறிது சிறிதாகக் கூடி 13-12-83ல் சூரியனிலிருந்து கூடிய தூரம் பிரிந்து 21 பாகை உயரத்தில் தோற்றும். மாதமுடிவில் 20 பாகை உயரத்தில் காணப்படும். 29-11-83ல் துலாராசியிற் பிரவேசிக்கிறது.

சுக்கிரன்: மாத ஆரம்பத்தில் சூரியோதயம் முன் கீழ்வானத்தில் 46 பாகை உயரத்தில் காணப்படும் இக்கிரகம் மாதமுடிவில் 43 பாகை உயரத்தில் காணப்படும். 1-12-83ல் துலாராசியிற் பிரவேசிக்கிறது.

செவ்வாய்: மாதத் தொடக்கத்தில் சூரியோதயம் முன் கீழ்வானத்தில் 55 பாகை உயரத்தில் காணப்படும் இக்கிரகம் மாதமுடிவில் 67 பாகை உயரத்திற் காணப்படும். இம் மாதம் முழுவதும் கன்னி ராசியிலேயே சஞ்சரிக்கின்றது.

வியாழன்: மாத ஆரம்பத்தில் சூர்யாஸ்தமனத்தின்பின் மேற்குவானில் 22 பாகை உயரத்திற் காணப்படும் இக்கிரகம் 3-12-83ல் மேற்கில் சூர்ய சாமீப்யத்தால் அஸ்தமனமடையும். 7-12-83 ல் விருச்சிக ராசியில் கேட்டை 4ம் பாதத்திற் சஞ்சரிக்கிறது.

சனி: மாத ஆரம்பத்தில் கிழக்கில் உதயமாகியிருக்கும் இக்கிரகம் மாதமுடிவில் சூரியஉதயம் முன் கீழ்வானத்தில் 40 பாகை உயரத்தில் காணப்படும். 25-11-83ல் துலாராசியில் சுவாதி 4ம் பாதத்திற் பிரவேசிக்கிறது.

இந்திரன் (Uranus): விருச்சிக ராசியில் அனுஷம் 3ம் பாதத்திலும்;

வருணன் (Neptune): தனுராசியில் மூலம் 2ம் பாதத்திலும்;

குபேரன் (Pluto): துலாராசியில் சுவாதி 1ம் பாதத்திலும் சஞ்சரிக்கின்றன.

## சமாகமர்திகள்

26-11-83 நண்பகல் புதனுக்கு வியாழன் 3 பாகை. சூர்யாஸ்தமனமானதும் மேற்கு வானில் அவதானிக்கவும்.


29-11-83 முன்னிரவு சுக்கிரனுக்குத் தெற்கில் சித்திரை நக்ஷத்திரம் 4 பாகை. அதே நேரம் சந்திரனுக்குத் தெற்கு செவ்வாய் 4 பாகை. இரண்டையும் அன்று பின்னிரவில் (உதயம்முன்) கீழ் வானில் அவதானிக்கவும்.

1-12-83 அதிகாலை 2½ மணிக்கு சந்திரனுக்குத் தெற்கு சுக்கிரன் 2 பாகை. அன்று உதயம் முன் பார்க்கவும்.

2-12-83 முற்பகல் சந்திரனால் சனி மறைக்கப்படும் (Occultation) அவ்வாறு மறைக்க விருப்பதை உதயம்முன் அவதானிக்கவும்.

4-12-83 பகல் கங்கண சூரியகிரகணம். எமக்குத் தோற்றாது. கோமாலிலான்டிலிருந்து மத்திய ஆபிரிக்காவுக்கூடாக வடமத்திய அத்லாக்வரை அதன் மையம் அமைந்திருக்கும்.

6-12-83 காலையில் கிழக்காசியா, வடபசுபிக்கில் உள்ளவர்களுக்கு புதன் சந்திரனால் மறைக்கப்படும். அன்று சந்திரதர்சனத்தின்போது புதன் சந்திரனுக்குக் கீழ் (மேற்காக) புதன் இருப்பதைக் காணலாம்.




**டாக்டர் பண்டிற் கே. என். நவரத்தினம் A. F. A.**

**17-11-83 முதல் 15-12-83 வரை**

பின்வரும் இராசிப்பலன்கள் இம்மாதக் கிரகசாரத்தை யொட்டியே தரப்பட்டிருக்கின்றன. ஒரு சாதகரின் பலன்கள் அவரின் நட்சத்திர உடுதசா நிர்ணயத்தை ஒட்டியே ஏறக்குறைய முக்கால் பங்கு அமையும். கிரகசார பலன் கால் பங்கு வீதமே கிட்டத்தட்ட ஒருவரைப் பாதிக்கும். இதை மனதில் வைத்து பின்வரும் பலன்களை வாசித்துப் பயன் பெறவும். இங்கு இராசி என்று குறிப்பிடுவது ஜனன காலத்தில் சந்திரன் இருந்த இராசியேயாகும்.



## மேடம்

அசுவினி, பரணி, கார்த்திகை 1-ம் கால்

இவர்களுக்கு சூரியன் அட்டமராசியில் லோக மூர்த்தியாக வலம் வருவதால் நற்பலன்கள் கிடைப்பதற்கில்லை. மேலும் 6ல் செவ்வாய், சுக்கிரன் சேர்க்கை ஆரோக்கியச் சீர்கேடுகளை உருவாக்கும். 8ல் வியாழன், சூரியன், புதன், யுரேனஸ் ஆகிய கிரகங்கள் அவமானம், அவமரியாதை என்பவற்றைக் கொடுத்து மனநிம்மதியைக் கெடுக்கும். பண வருவாய் சுமாராகவிருப்பினும் செலவுகள் அதிகரிக்கும். 7ல் சனி காரியத்தடைகளை ஏற்படுத்தும். தொட்ட கருமங்கள் தொடர முடியாதவாறு சிக்கல்கள் உருவாகும்.

குடும்பஸ்தர்கட்கு 2ல் ராகு வரவுக்கு மிஞ்சிய செலவைக் கொடுத்து அமைதியின்மையை உருவாக்கும். களத்திரசுகம் பாதிப்புறும். நற்கருமங்கள், கொண்டாட்டங்கள் குறைவாயிருக்கும்.

வியாபாரிகட்கு புதன் அட்டமத்தில் இருப்பது மிகவும் சோதனையான காலமாகும். முதலீடுகள் பலிதமில்லை. வங்கி உதவி கிடைப்பதரிது. கள்ளமார்க்கட் கஷ்டத்தில் மாட்டிவிடும்.

உத்தியோகத்தர்கட்கு சூரியன் அட்டமத்திலிருப்பதால் எதுவித நன்மையுமில்லை; திட்டமிட்ட கருமங்கள் தவிடுபொடியாகும். சகாக்கள் தொல்லை கொடுப்பர். வசதியற்ற இடமாற்றங்களுக்குள்ளாக நேரிடும்.

விவசாயிகட்கு சனி 7ல் திக்பலம் பெற்று உச்சமடைவதால் நிலைமை ஓரளவு கட்டுக்கடங்கியிருக்கும். பயிர்நாட்டல், களை பிடுங்கல் போன்றவற்றில் செலவுகள் அதிகமாகும். இயற்கையழிவுகள் ஏற்படினும் கட்டுப்படுத்தலாம்.

தொழிலாளர்கட்கு முதலாளிகளுடன் உள்ள பிணக்கு வ[illegible]வடையும். புதுத்தொழில் வாய்ப்புகள் இல்லை. 6ல் செவ்வாய் இருப்பதால் ஆயுதங்களுடன் பழகுவோர் மிக அவதானமாக இருக்கவும்.

மாணவர்கட்கு கல்விக்குரியவன் நற்பார்வையில் இல்லாததால் கல்வியில் குழப்பநிலையேற்படலாம். வியாழன் அட்டமத்திலிருப்பது உயர்கல்விக்கு நன்றல்ல. கலை விளையாட்டுக்களிலும் கலகலப்பை காணமுடியாது.

பெண்களுக்கு விவாக சம்பந்தமான விடயங்களுக்கு முடிவேற்படாது. காதல் விடயங்களில் தோல்வி கிடைப்பதுடன் அவமானப்படவும் நேரிடும். கர்ப்பிணிகள் உடல் உபாதைகளுக்குள்ளாவர். கணவனின் அனுசரணையில்லை.

அதிஷ்ட நாட்கள்: நவ 29,30,டிச10பி.ப,11,12.

துரதிஷ்ட நாட்கள்: நவ 17,டிச3,4,5மு.ப,13,14,15



## இடபம்

கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசிரிடம்1,2-ம்கால்

இவ்விராசியினர்க்குச் சூரியன் சுவர்ணமூர்த்தியாக 7ல் பவனி வருவதால் கஷ்டபலன்கள் குறைவடையும். எனினும் 5ல் செவ்வாயும், சுக்கிரனும் எண்ணிய கருமங்களில் சிக்கல்களைக் கொடுக்கத் தயங்காது. இனசன கொண்டாட்டங்களில் மனமகிழ்வு ஏற்படும். பணவருவாய் செலவுக்கேற்றவாறு அமையும். வெளிநாட்டுத் தொடர்புகள் அதிகம் வெற்றியளிக்காது. வியாழன் 7ல் சூரியனுடன் சேர்வதால் தெய்வீக கடாட்சத்தால் காரிய விக்கினங்களை வெற்றி கொள்ளலாம்.

குடும்பஸ்தர்கட்கு குடும்பாதிபன் புதன் வியாழனுடன் கூடுவதால் இல்லறம் நல்லறமாக விளங்கும். உறவினர் நற்கருமங்களில் கலந்துகொள்வதன் மூலம் நற்பெயர் கிடைக்கும். களத்திர சுகம், புத்திர முன்னேற்றம் திருப்தியளிக்கும்.

வியாபாரிகட்கு புதன் 7ல் இருப்பதால் லாபத்திற்குக் குறைவில்லை. வங்கி உதவிகள் திருப்தி தரும். 5ல் செவ்வாய், சுக்கிரன் முதலீடுகளுக்கு நன்றல்ல. கூட்டுறவு வியாபாரம் நன்ருக நடக்கும்.

உத்தியோகத்தர்கட்கு எண்ணிய கருமங்கள் தடைப்படினும் இறுதியில் கைகூட வாய்ப்புண்டு. ஜன்மராசி ராகு சில சில குழப்பங்களை உண்டு பண்ணும்: கடின உழைப்பிற்கேற்ப நற்பெயர் கிடைக்கும்.

விவசாயிகட்கு 6ல் சனி மிக விசேட பலனளிப்பார். பயிர் செழிப்புடன் வளரும். பயிர்ச்செய்கையில் மாற்றம் செய்வதற்கு புதுப்பயிர் நாட்டுவதற்கு உகந்த காலமாகும்.

தொழிலாளர்கட்கு உழைப்பிற்கேற்ற ஊதியம் உண்டு. பணவருவாய் அதிகரிக்கும். அதே நேரத்தில் தேவையற்ற செலவுகளும் செய்யத் தயங்கமாட்டீர்கள். புதுத்தொழில் முதலீடுகளைப் பின்போடுதல் நன்று.

மாணவர்கட்கு கல்வித்துறையில் ஓரளவு முன்னேற்றமுண்டு. காதல் கிளர்ச்சிகளால் சிலர் குழப்பமடைவர். விளையாட்டு, கேளிக்கைகளில் பணவிரயம் ஏற்படும். கட்டுப்பாட்டுடன் கல்வியில் கவனம் செலுத்திஞல் வெற்றி நிச்சயம்.

பெண்களுக்கு விவாக முயற்சிகள் திருப்தியளிக்கும். கணவனின் சிறப்புகள் உங்களை மகிழ்ச்சியிலாழ்த்தும். தொழில் பார்ப்போர் சேவை மனப்பான்மையுடன் கருமமாற்றுவர்.

அதிஷ்ட நாட்கள்: நவ17,டிச1,2,13,14,15.

துரதிஷ்ட நாட்கள்: நவ18,19,20மு.ப,5பி.ப,6,7,



## மிதுனம்

மிருகசிரிடம்3,4, திருவாதிரை, புனர்பூசம்1,2,3

மிதுனராசிக்காரர்களுக்கு சூரியன் தாம்ர மூர்த்தியாக சஞ்சாரம் செய்யினும் 6ல் ஸ்தான பலம் பெறுவதால் நன்மை தீமை கலந்தபலன்கள் ஏற்படும். 4ல் சுக்கிர செவ்வாய் சேர்க்கை பொருளாதார விருத்திக்கு நன்றல்ல. கேது வயிறு சம்பந்தமான ரோகங்களைக் கொடுக்க முனையினும்

வியாழன் பாதுகாப்பளிப்பார். தனம் சம்பந்தமான கொடுக்கல் வாங்கல்களில் மனத்திருப்தியுண்டு. 12ல் ராகுவால் சயனசுகக் குறைவேற்படும். நீண்டகால முயற்சியின்மேல் கருமங்கள் கைகூடும்.

குடும்பஸ்தர்கட்கு செவ்வாயால் இல்லற அமைதி சிறிது பாதிப்படையும். கடன் தொல்லைகள் அதிகரிக்கலாம். புத்திர சுகங்கள் நற்காரியச் சிறப்புகள் என்பன குறைவாகவே இருக்கும்.

வியாபாரிகட்கு முன் முதலீடுகளால் நற்பலன்கள் கிடைப்பதற்கில்லை. ஆடை அலங்காரப் பொருட்கள் தேங்கிக்கிடக்கும். தரகு பவுண் சம்பந்தமான தொழில்கள் விருத்திபெறும். ஏற்றுமதி வர்த்தகம் தடைப்படும்.

உத்தியோகத்தர்கட்கு சூரியன் ஸ்தான பலமடைவதால் காரியாலயத்தில் அமைதி நிலவும். மாற்றம் சம்பந்தமான நடவடிக்கைகள், சம்பள உயர்வுகள் என்பன கிடைப்பதற்கு காலம் சாதகமாக இல்லை.

தொழிலாளர்கட்கு தொழில் மந்தநிலையிலிருக்கும். பண முடக்கம் கஷ்டத்திலாழ்த்தும். ஒப்பந்தங்களை நிறைவேற்றுவது கடினம். புதிய ஒப்பந்தங்களைத் தவிர்த்தல் நன்று.

விவசாயிகட்கு விவசாய விருத்திக்கு இடமில்லை. 4ல் செவ்வாய் வயல் அழிவுகளை உண்டு பண்ணுவார். விவசாயத்தில் தடைகள் ஏற்பட்டு செலவுகள் அதிகரிக்கும். பயிர்ச்செய்கையில் எதிர்பார்த்த லாபமிராது.

மாணவர்கட்கு மறதியும் மந்தநிலையும் காரணமாக கல்வி பாழாகும். சட்டம், வர்த்தகம் முதலிய துறையிலுள்ளோர் ஓரளவு முன்னேறுவர். கலை விளையாட்டுக்கள் எள்ளளவும் ஒத்துவரா. பரீட்சைகளிலும் சித்தியடைவது கடினம்.

பெண்களுக்கு தங்கள் எண்ணக்கிடக்கைகளை நிறைவேற்ற முடியாதவாறு கஷ்டங்கள் தோன்றும். சிறுமிகளுக்கு பெற்றோரால் தொல்லைகள் ஏற்படும். விவாகமானோர் புத்திர சோகத்தால் கவலையடைவர். தொழில் பார்ப்போருக்கு 6ல் சூரியன் ஆத்மதிருப்தியளிக்கும்.

அதிஷ்ட நாட்கள்: நவ. 18, 19, 20 மு.ப., டிச 3, 4, 5 மு.ப.

துரதிஷ்ட நாட்கள்: நவ 20 பி.ப. 21, 22 மு.ப. டிச. 8, 9, 10 மு.ப.



## கடகம்

**புனர்பூசம் 4-ம் கால், பூசம், ஆயிலியம்**

இவ்விராசியிற் பிறந்தவர்கட்கு சூரியன் 5ல் இரஜத மூர்த்தியாகப் பவனி வருவதால் பட்ட கஷ்டங்கள் படிப்படியாக குறையும். 5ல் வியாழன் எண்ணிய கருமங்களை இதயசுத்தியுடன் நிறைவேற்ற உதவியாக இருப்பார். தேகசுகம் சிறிது பாதிப்படையும். 3ல் சுக்கிரனும் செவ்வாயும் இருப்பதால் இனசனங்களிடையேயும் அயலவர்களிடையேயும் சிறு எதிர்ப்புகள் தோன்றி மறையும். பணமுடையேற்படாது. 11ல் ராகுவால் அந்நிய சேர்க்கைமூலம் நன்மைகளுண்டாகும். சுற்றுடலில் அமைதி நிலவும்.

குடும்பஸ்தர்கட்கு குடும்பஸ்தானதிபதி சூரியன் திரிகோண ராசியில் வீற்றிருப்பதால் சகல சௌபாக்கியங்களும் கிடைக்க வழி பிறக்கும். கடன் தொல்லைகள் குறைவடையும். புத்திர முன்னேற்றம் களத்திர சுகம் என்பவற்றிற்கு குறைவிராது.

வியாபாரிகட்கு தொட்டதெல்லாம் பொன்னாகத் துலங்கும். முதலீடுகள் செய்ய ஏற்றகாலம். வியாபாரஸ்தலங்கள் புனருத்தாரணம் செய்யலாம். வங்கி உதவிகள் கிடைக்கும். சகலதுறை வியாபாரமும் வளர்ச்சியடையும்.

உத்தியோகத்தர்கட்கு அரசியல் லாபங்கள் கிடைக்கும். சகாக்கள். மேலதிகாரிகள் யாவரையும் புத்தி சாதுரியத்தால் வெற்றி கொள்ளலாம். நன்மாற்றங்கள் கிடைக்க இடமுண்டு.

விவசாயிகட்கு சனி 4ல் இருப்பினும் கவலை வேண்டியதில்லை. பயிர்கள் செழிப்புடன் வளரும். தோட்டம் சம்பந்தமான வேலைகள் பூரண வெற்றியளிக்கும். பண்ணை விவசாயிகள் நஷ்டமடைய நேரிடும்.

தொழிலாளர்கட்கு இடை நிறுத்தப்பட்ட ஒப்பந்தங்கள் தொடர வழியுண்டு. அந்நிய சகாக்களின் உதவி கிடைக்கும். புத்தி சாதுரியமாக நடந்து முதலாளிகளுடன் கருமத்தைச் சாதித்துக் கொள்ளலாம்.

மாணவர்கட்கு கல்வியில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். மூர்த்தி பலம் பெற்ற சூரியனுல் எல்லா கருமங்களையும் வெற்றி கொள்ளலாம். வாக்கு வசீகரம் சிறந்து விளங்கும். நேர்முகப் பரீட்சைகளில் சாதகமான முடிவை எதிர்பார்க்கலாம்.

பெண்களுக்கு கணவனின் அனுசரனை அதிகரிக்கும். விவாகத்தை எதிர்பார்ப்போருக்கு விவாகமுயற்சிகள் பயனளிக்கும். விவாமானேர்க்கு புத்திர பாக்கியங்கள் கிடைக்கும். தொழில் பார்க்கும் பெண்கள் தொழிலில் முன்னேற்றமடைவர்.

அதிஷ்ட நாட்கள்: நவ 20 பி.ப., 21, 22 மு.ப, டிச. 5 பி.ப, 6, 7.

துரதிஷ்ட நாட்கள்: நவ 22 பி.ப, 23, 24 மு.ப. டிச 10 பி.ப, 11, 12.




மகம், பூரம், உத்தரம் 1-ம் கால்

சிங்கராசியிற் பிறந்தோருக்குச் சூரியன் 4-ல் லோகமூர்த்தியாக வலம் வருவதால் கஷ்டபலன்களே அதிகரிக்கும். 2-ல் சுக்கிரனும் செவ்வாயும் பணச் செலவுகளை அதிகமாக்கும். 4-ல் வியாழன் இருப்பதால் சுற்றுடல் அமைதி பேணப்படும். இனத்தவரிடையே மனஸ்தாபங்கள் தோன்றி மறையும். 10-ல் ராகு தொழில் ரீதியான அந்தஸ்தை பாதுகாத்துக்கொள்ள உதவும். வெளியிடத் தொடர்புகளால் நன்மை ஏதும் இல்லை. 3-ல் சனி உச்சம் பெறுவதால் சகோதர தொல்லைகள் அதிகமிராது.

குடும்பஸ்தர்கட்கு குடும்பாதிபன் புதன் 4-ல் இருப்பதால் இல்வாழ்வில் அமைதியைக் காண இயலாது. குடும்ப செலவுக்கு பணப்பற்றுக்குறை ஏற்படும். வீண் வாக்கு வாதங்களால் குடும்ப சண்டைகள் வலுப்பெறும்.

வியாபாரிகட்கு வியாபாரம் நஷ்டமடைந்து என்ன செய்வதென்று தெரியாது திண்டாடுவர். முதலீடுகள் பயனளிக்காது. பங்கு வியாபாரிகள் தலைதூக்க முடியாதவாறு இருக்கும். சனி 3-ல் இருப்பது கூட்டுறவாளருக்கு ஓரளவு நன்று.

உத்தியோகத்தர்கட்கு 4-ல் சூரியனுல் எவ்வித நன்மையுமில்லை. காரியாலயத்தில் அமைதி நிலவுவது கடினம். எவ்வித புதிய கருமங்களையும் ஆரம்பிக்காதிருத்தல் நன்று.

விவசாயிகட்கு சனி 3-ல் அதிகம் தீமையில்லை. நினைத்தமாதிரி பயிர் வளர்ச்சியை எதிர்பார்க்க முடியாது. காலபோகச் செலவுகள் அதிகரிக்கும். பண்ணை விவசாயிகட்குப் பாதிப்பில்லை.

தொழிலாளர்கட்கு கடின உழைப்பிற்கேற்ப ஊதியம் இல்லை. தொழில் வாய்ப்புகள் அருகும். தொடங்கிய தொழில்கள் முடிவடையாமல் நஷ்டத்தையேற்படுத்தும். தொழில் விருத்தி காண்பது கடினம்.

மாணவர்கட்கு எதுவித கல்வியிலும் முன்னேற்றம் கிடைப்பதற்கில்லை. உயர்கல்வியில் மாற்றங்கள் ஏற்படும். நேர்முகப் பரீட்சையில் குழப்பநிலை உருவாகும். வெளிநாட்டுக் கல்வியிலும் முன்னேற்றத்தை எதிர்பார்க்க முடியாது.

பெண்களுக்கு விவாக முயற்சிகள் தடைப்படும். பிரச்சினையுடைய குடும்பஸ்தர்கள் பிரிவினையடைவர். தொழில் பார்க்க முயற்சிப் போர்க்கு காலம் சாதகமில்லை. தொட்ட கருமங்கள் சிக்கல்களை உருவாக்கும்.

அதிஷ்ட நாட்கள்: நவ 22 பி.ப. 23, 24 மு.ப. டிச 8, 9, 10 மு.ப.

துரதிஷ்ட நாட்கள்: நவ 17. 24 பி.ப. 25,26 மு.ப. டிச 13, 14, 15.




உத்தரம் 2,3,4, அத்தம், சித்திரை 1,2ம் கால்

கன்னிராசியைச் சேர்ந்தோருக்குச் சூரியன் 3-ல் தாம்ரமூர்த்தியாக வலம் வருவதால் தொடர்ந்து கஷ்ட பலன்களையே அனுபவிக்க நேரும். 2-ல் சனியால் பணக்கஷ்டங்கள் அதிகரிக்கும். வியாழன் 3-ல் அபகீர்த்தி, அவமரியாதை என்பவற்றை உண்டுபண்ணும். 4ல் நெப்டியூன் மன அமைதியைக் கெடுக்கும். ஜன்மராசிச் சுக்கிரனும் செவ்வாயும் தலைவலி சம்பந்தமான

ரோகங்களைக் கொடுக்கும். பிறதேச விவகாரங்களில் வெற்றியை எதிர்பார்க்க இயலாது. 9ல் ராகு இருப்பினும் நற்பலன் கிடைப்பதற்கில்லை.

குடும்பஸ்தர்கட்கு சுக்கிரன் குடும்பாதிபனுகி ஜன்மராசியில் நீசமடைவதால் களத்திர சுகம் சிறிதளவும் இல்லை. புத்திர சுகங்கள் கிடைப்பதற்கில்லை. அயலவர்களுடன் கொண்டாட்டங்களைக் குறைத்துக் கொள்ளவும்.

வியாபாரிகட்கு வியாபாரத்தில் லாபம் கிடைப்பதரிது. முதலீடுகள் போதிய பலன்தராது. ஸ்தாபனத்தின் பெயர் வளர்ச்சியடையாது. தொட்ட கருமத்திலும் பிரச்சனைகள் தோன்றிய வண்ணமிருக்கும்.

உத்தியோகத்தர்கட்கு சூரியன் 3ல் ஸ்தான பலமடைவதால் அதிக கஷ்டங்கள் ஏற்படுவதற்கில்லை. ஏழரைச்சனி காரணமாக கர்ரிய விக்கினங்கள் ஏற்படத்தான் செய்யும். சினேகிதர்களால் செலவுகள் அதிகரிக்கும்.

விவசாயிகட்கு சனி பயிர்ச்செழிப்பைக் கொடுக்காது. கடும் முயற்சி மேற்கொள்ளினும் பயிர் வளர்ச்சியைக் காண இயலாது. காணித் தகராறுகள் வலுவடையும்.

தொழிலாளர்கட்கு செய்தொழில் விருத்தி பெற வழியில்லை. தொழில் வாய்ப்புகள் சீராக இராது. ஆயுத பயம் ஒருபுறம் உங்களை வாட்டும் புது ஒப்பந்தங்கள் எதுவும் செய்துகொள்ள வேண்டாம்.

மாணவர்கட்கு கல்வியில் முன்னேற்றமில்லை. தபால் கல்வி பயில்வோர்க்கு 3ல் புதன் விசேடமாக உதவி புரியும். வெளிநாட்டில் உயர்கல்வி கற்போர் நன்மையடைவது கஷ்டம்; காதல் கிளர்ச்சிகளால் எதிர்காலம் வீணாகும். மிக எச்சரிக்கையுடனிருக்கவும்.

பெண்களுக்கு காதல் எண்ணங்கள் தலைதூக்கினும் நிறைவேறுவதில் தடங்கல்களுண்டாகும். விவாகமானோர் கணவனைப்பற்றி சதா கவலை கொள்வர். தொழில் பார்ப்போருக்கு அந்தஸ்தில் உயர்வு இல்லை. வெளிநாட்டு விவாக முயற்சிகள் ஓரளவு நன்மையளிக்கும்.

அதிஷ்ட நாட்கள்: நவ 24 பி.ப. 25, 26, மு.ப.

துரதிஷ்ட நாட்கள்: நவ 18, 19, 20 மு.ப, 26 பி.ப, 27,28, டிச 10 பி.ப 11, 12



# துலாம்

சித்திரை 3, 4, சுவாதி, விசாகம் 1, 2, 3

இவ்விராசியில் ஜனனமானோர்க்குச் சூரியன் 2ல் சுவர்ணமூர்த்தியாக பவனி வருவதால் நற்பலன்கள் அதிகமுண்டு. 2ல் வியாழனால் தனவரவு அதிகமாகும். ஜன்மராசிச் சனி கடின உழைப்பின் மேல் முன்னேற்றமளிக்கும். 12ல் செவ்வாய் சுக்கிரன் சயன சுகக்குறைவு ஏற்படுத்தும். 2ல் யுரேனஸ் எதிர்பாராத பணச் செலவுகளை உண்டு பண்ணும். தூரதேசப் பயணங்களில் நன்மை யேற்படாவிடினும் சந்தோஷகரமாக அமையும். 8ல் ராகு வெளியார்களால் சில அவ்மரியாதைகளைக் கொடுக்கும்.

குடும்பஸ்தர்கட்கு இல்லற சுகங்கள் அதிகரிக்கும். குடும்ப முன்னேற்றத்திற்காக கடினமாக உழைப்பீர்கள். களத்திரசுகம் குறைவாக இருப்பினும் மனத்தாங்கல் ஏற்படாது. மனைவி மக்களால் நன்மைகள் ஏற்படும்.

வியாபாரிகட்கு வங்கி உதவியுடன் முதலீடுகளைப் பெருக்கிக்கொள்ளக் கூடியதாக இருக்கும். அயலவர்களுடன் போட்டி போட்டு வியாபாரம் செய்யலாம். இராப்பகலாக உழைத்து இலாபத்தைக் கூட்டிக் கொள்ளலாம்.

உத்தியோகத்தர்கட்கு வாக்கு ஸ்தானத்தில் மூர்த்தி பலமடைந்த சூரியன் காரிய சித்தியைக் கொடுக்கும். உங்கள் கடின உழைப்பைக் கண்டு மேலதிகாரிகள் மகிழ்ச்சியடைவர். வேண்டிய மாற்றங்களை மேற்கொள்ளலாம்.

விவசாயிகட்கு ஜன்மராசிச் சனி அளவிற்கு மிஞ்சிய உழைப்பைக் கொடுப்பினும் பயிர்கள் செழிப்பாக வளர்ந்து நற்பலனளிக்கும். முதலிட்டதற்கேற்ப பணத்தை லாபத்துடன் எதிர்பார்க்கலாம். வழக்கு விவகாரங்கள் சாதகமான தீர்வடையும்.

தொழிலாளர்கட்கு முயற்சிக்கேற்ப கூடுதல் வருமானத்தை முதலாளிகளிடமிருந்து எதிர்பார்க்

கலாம். சொந்த தொழில் செய்ய விரும்புவோர் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தலாம். புதிய ஒப்பந்தங்களுக்கு வாய்ப்புகள் கிடைக்கும்.

மாணவர்கட்கு கல்வியைப் பற்றி கவலை வேண்டியதில்லை. பலவிதத்திலும் பரீட்சையில் சித்தியடையக் கூடியவாறு கிரகநிலைகளுள்ளன. பட்டப்படிப்பில் முன்னேற்றமுண்டு. முயற்சியை அதிகரிப்பதன் மூலம் உங்கள் தராதரத்தை உயர்த்திக்கொள்ளலாம்.

பெண்களுக்கு விவாகப்பேச்சுகள் நல்ல முடிவைத்தரும். தொழில் தேடுபவர்களுக்கு நல்ல வாய்ப்புகளுண்டு. தெய்வீககிருபையால் கணவனின் முன்னேற்றம் சிறப்பாக இருக்கும். கன்னியர்க்கு காதல் விவகாரங்களில் சுக்கிரனின் உதவி குறைவாகவே இருக்கும்.

அதிஷ்ட நாட்கள்: நவ 17, 26பி.ப, 27, 28
டிச 13, 14, 15

துரதிஷ்ட நாட்கள்: நவ 20 பி.ப, 21, 22 மு.ப, 29, 30.




விசாகம் 4-ம் கால், அனுஷம், கேட்டை

இவ்விராசியினர்க்குச் சூரியன் ஜன்மராசியில் இரஜத மூர்த்தியாக பவனி வருவதால் இதுவரை அனுபவித்த கஷ்டங்கள் குறைவடையும். ஜன்ம ராசி வியாழன் சூரியனுடன் சேர்வதால் தெய்வீக கடாட்சத்தால் எடுத்த கருமங்கள் நிறைவேற உதவியாகும். 11-ல் சுக்கிரன் செவ்வாய் இனத்தவர்களால் பணநஷ்டம் பொருள் நஷ்டம் ஏற்பட ஏதுவாகும். தேகாரோக்கியம் சுமாராக விருக்கும். பணவருவாய் செலவுக்கேற்றவாறு அமையும். வெளியூர் பயணங்களில் திருப்திகரமான மாற்றங்கள் ஏற்படும்.

குடும்பஸ்தர்கட்கு குடும்பாதிபன் வியாழன் ஜன்மராசியிலிருப்பதால் இல்வாழ்வில் தொல்லைகள் குறைவாயிருக்கும். 2-ல் நெப்டியூன் இருப்பதால் கையில் கிடைக்கும் பணம் உடனே கரைந்துவிடும். நற்காரியச் சிறப்புகள் இல்லை.

வியாபாரிகட்கு முதலீடுகளில் எதிர்பார்த்த லாபம் கிடையாவிடினும் வியாபாரம் சுமாராக நடக்கும். திட்டமிட்டபடி சீர்திருத்தங்கள் செய்யமுடியாது. 7-ல் ராகு இருப்பதால் பங்கு வியாபாரிகட்கு அவ்வளவு நன்றல்ல.

உத்தியோகத்தர்கட்கு சூரியன் மூர்த்தி பலமடைவதால் திட்டமிட்டபடி கருமங்களை நிறைவேற்ற உதவியாயிருக்கும். அதிகாரிகள் உங்களுக்குச் சாதகமாக நடந்து கொள்வர். மாற்றங்கள் பதவியுயர்வுகள் இப்போதைக்கு இல்லை.

விவசாயிகட்கு சனி 12-ல் பயிர் அழிவையும் பொருள் அழிவையும் கொடுக்கத் தயங்காது. கூலியாட்கள் சம்பந்தமான செலவுகள் அதிகரிக்கும். பயிர்ச்செழிப்பைக் காணமுடியாது.

தொழிலாளர்கட்கு புதுத்தொழில்கள் கிடைப்பதரிது. சகாக்களால் கிடைக்கவிருந்த வாய்ப்புகள் நழுவிப்போகும். செய்து கொண்ட ஒப்பந்தங்களாலும் பிரச்சினைகள் உருவாகும். ''செய்தொழிலே தெய்வம்'' என்றிருக்க வேண்டியதுதான்.

மாணவர்கட்கு புதன் முயற்சிக்கேற்ற முன்னேற்றத்தைக் கொடுப்பார். வெளியார் விடயங்களில் தலைகொடுக்காது உங்கள் கருமங்களில் கண்ணும் கருத்துமாயிருந்தால் பரீட்சையில் சித்தியடைவது அவ்வளவு கடினமல்ல. வேலை வாய்ப்புகளுக்கு உகந்ததாயில்லை.

பெண்களுக்கு விவாக விடயங்களில் முன்னேற்றம் காண முடியாது. குடும்பஸ்தர்களுக்கு கணவனின் அனுசரணையுண்டு. காதல் முயற்சிகளில் ஈடுபட்டோர் கஷ்டப்படுவர். தொழில் பார்க்கும் பெண்களுக்கு ஓரளவு நன்று.

அதிஷ்ட நாட்கள்: நவ 18. 19, 20 மு. ப. 29,30.

துரதிஷ்ட நாட்கள்: நவ 22 பி. ப, 23, 24 மு. ப.
டிச 1, 2.




மூலம், பூராடம், உத்தராடம் 1-ம் கால்

தனுராசிக் காரர்களுக்கு சூரியன் லோக மூர்த்தியாக 12ல் வலம் வருவதால் கஷ்டபலன்களுக்குரிய மாதமாகவே தென்படுகிறது: 11ல்சனி சினேகிதர்களால் நஷ்டங்களையும் பிரிவினைகளையும் உருவாக்கும். 10ல் செவ்வாய், சுக்கிரன் அந்

தஸ்து கௌரவம் என்பவற்றை பாதிப்படையச் செய்யும். 6ல் ராகுவால் சரீமரோகங்கள் தோன்றலாம். 12ல் வியாழன் சயனசுகத்தைக் கொடுப்பினும் பண விடயத்தில் சற்றுக் கஷ்டமான பலனையே அளிக்கும். திட்டமிட்டபடி கருமங்களை நடைமுறைப்படுத்த முடியாதிருக்கும்.

குடும்பஸ்தர்கட்கு குடும்பாதிபன் சனி 11ல் உச்சமடையினும் இல்லற சுகம் கிடைப்பதற்கில்லை. குடும்ப கௌரவத்தை நிலைநாட்ட படாதபாடு படவேண்டியிருக்கும். பணமுடை அதிகரிக்கும்.

வியாபாரிகட்கு வியாபார விருத்தியில்லை. முதலீடுகள் பலிதமடையாது. வங்கி உதவிகள் கிடைப்பதரிது. 7-ம் அதிபதி 12லும் 11ல் சனியும் இருப்பதால் பங்கு வியாபாரிகள் சோதனைக்குள்ளாவர். கள்ள மார்க்கட் மூலம் இழுக்கைத் தேடிக்கொள்வீர்கள்.

உத்தியோகத்தர்கட்கு சூரியன் 12ல் அரச நன்மைகளுக்கு நன்றல்ல. மேலதிகாரிகளிடமிருந்து எவ்வித அனுசரணையும் பெறமுடியாது. கடுமையான தண்டனைக்குள்ளானாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. வேலைப்பளு அதிகமாகும்.

விவசாயிகட்கு சனி 11ல் பயிர்ச்செய்கையில் ஓரளவு லாபத்தைக் காட்டும். பயிர்ச்செழிப்பு சுமாராகவிருக்கும். வழக்கு விவகாரங்களைப் பின்போடுதல் நன்று.

தொழிலாளர்கட்கு புதுத்தொழில் வாய்ப்புகள் கிடைப்பதரிது. ஒப்பந்தங்கள் பிரச்சனைகளை உருவாக்கும். சம்பள உயர்வுகள் கிடைப்பதற்கில்லை. செய்தொழிலில் மாற்றங்கள் செய்யகாலம் உகந்ததாக இல்லை.

மாணவர்கட்கு கல்வியிலும் பார்க்க விளையாட்டுக்களிலேயே காலம் விரயமாகும். உயர் கல்வியில் முன்னேற்றமில்லை. காலம் கடந்த முயற்சியால் பயன்பெற முடியாதிருக்கும். சோம்பலை விடுத்து கல்வியில் கடும் கவனம் செலுத்தவும்.

பெண்களுக்கு 10ல் செவ்வாய் அந்தஸ்து உயர்வைத் தரினும் மனநிம்மதியான வாழ்வை எதிர்பார்க்கமுடியாது. விவாகப் பேச்சுக்களில் திருப்தியிராது. பெற்றோர் தலையீட்டால் காதல் விவகாரங்கள் அம்பலமாகும். தொழில் வாய்ப்புகள் ஓரளவிற்குண்டு.

அதிஷ்ட நாட்கள்: நவ 20 பி.ப, 21, 22 மு.ப, டிச 1, 2.

துரதிஷ்ட நாட்கள்: நவ 24 பி.ப, 25, 26 மு.ப, டிச 3, 4, 5 மு.ப.



# மகரம்

உத்தராடம் 2, 3, 4 திருவோணம், அவிட்டம் 1,2.

இவர்களுக்கு சூரியன் 11-ல் தாம்ரமூர்த்தியாகச் சஞ்சாரம் செய்வதால் நன்மை தீமை கலந்தபலன்கள் காணப்படும். 5-ல் ராகு எண்ணிய கருமங்களில் தடையையும் 11-ல் கேது சேர்ந்தவர்களால் கெடுதியையும் ஏற்படுத்தும். 11-ல் வியாழன் இருப்பதால் பணவருவாயில் பாதிப்பில்லாது பாதுகாத்துக் கொள்ளும். ஆரோக்கியம் திருப்திகரமாக இராது. வெளியிடத் தொடர்புகளில் குழப்பநிலை உருவாகும். 10-ல் சனி உச்சமடைவதால் தொழில் ரீதியில் பாதிப்பு ஏற்படாது. 9-ல் சுக்கிரன், செவ்வாய் பிதுர்வழி நஷ்டங்களைத் தரும்.

குடும்பஸ்தர்கட்கு குடும்பாதிபன் சனி 10-ல் உச்சமடைவதால் இல்லறம் நல்லறமாகப் பேணப்படும். லாபஸ்தானத்தில் வியாழன் புத்திர முன்னேற்றங்களுக்கு நன்று. பணத்தட்டுப்பாடு சமாளிக்கக் கூடியதாக இருக்கும்.

வியாபாரிகட்கு புதன் 11-ல் இருப்பதால் வியாபார நடவடிக்கைகளையிட்டு கவலை வேண்டியதில்லை. மற்றைய கிரக சாரங்கள் திருப்திகரமாக இல்லாததால் மேல் முதலீடுகள் விரும்பத்தக்கதல்ல.

உத்தியோகத்தர்கட்கு சூரியன் லாபஸ்தானத்தில் அதிகாரிகளின் செல்வாக்கைப் பயன் படுத்த உதவிபுரியினும் திட்டமிட்டபடி கருமங்களைச் சாதிப்பது கஷ்டம். சொந்த உழைப்பை நம்பி கருமங்களைச் செய்யவும்.

விவசாயிகட்கு 10-ல் சனி சுயமுயற்சியால் பயிர்ச்செய்கையில் லாபம் அடையச் செய்யும். கிருமிகளால் பயிர் அழிவுகள் ஏற்படலாம். பெரியோர் உதவியால் வழக்கு விவகாரங்கள் தீர்வடையும்.

தொழிலாளர்கட்கு செய்தொழில் விருத்தி குறைவாயிருப்பினும் வேறு தொழில் மாற்றம் செய்வது நன்றல்ல. ஒப்பந்தங்கள் கைக்கு வருவது அருமை. கட்டிட சம்பந்தமான அழிவுகள் ஏற்படலாம்.

மாணவர்கட்கு கல்வியில் தடங்கல்கள் தோன்றினும் ஈற்றில் சித்தியடையக் கூடியதாக இருக்கும். செவ்வாய், சுக்கிரனின் சஞ்சாரம் தூரதேசக் கல்விக்கு நன்றல்ல. சொந்த முயற்சியில் தொழில் வாய்ப்புகளைத் தேடிக்கொள்ளலாம்.

பெண்களுக்கு விவாகப் பேச்சுக்களில் சாதகமான முடிவை எதிர்பார்க்கமுடியாது. நல்ல கணவன் கிடைக்கும் வாய்ப்புகள் இருந்தும் உறவினர் தலையீட்டால் காரியம் கெட்டுப் போகும். குடும்பப் பெண்கள் கணவனைத் தெய்வமாக மதித்து நடப்பர்.

அதிஷ்ட நாட்கள்: நவ 22 பி. ப, 23, 24 மு. ப, டிச 3, 4, 5 மு. ப.

துரதிஷ்ட நாட்கள்: நவ 26, பி. ப. 27, 28, டிச 5, பி. ப. 6, 7.




அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2, 3

ஜன்மராசியைக் கும்பமாக உடையவர்களுக்கு சூரியன் இரஜத மூர்த்தியாக 10ல் திக்பலம் பெற்று பவனி வருவதால் கவலைப்பட எதுவுமில்லை. அட்டமத்தில் செவ்வாய், சுக்கிரன் இருப்பதால் சிறுவிபத்துக்கள் ஏற்படினும் சமாளித்துக் கொள்ளலாம். வியாழன் 10ல் சூரியனுடன் கூடியிருப்பதால் தெய்வீக அனுக்கிரகத்தால் புகழ், கீர்த்தி, அந்தஸ்து என்பன உங்களை நாடி வரும். பணவருவாய் தேவைக்கேற்ப இருக்கும். தூரதேச தொடர்புகளில் மகிழ்ச்சிகரமான திருப்பங்கள் தோன்றும். சமூக சேவையில் முன்னணியில் நிற்பீர்கள்.

குடும்பஸ்தர்கட்கு குடும்பாதிபன் வியாழன் கேந்திர மேறியிருப்பதால் இல்வாழ்வில் சகல சௌபாக்கியங்களும் கிடைக்கும். பண முடை நீங்கும். இனசன கொண்டாட்டங்களுக்கு குறைவிராது. களத்திரசுகம் தாராளமாகவுண்டு.

வியாபாரிகட்கு வியாழன் பலவிதத்திலும் பணத்தேவையைப் பூர்த்தி செய்வான். முதலீடுகள் மேற்கொள்ளலாம். வெளிநாட்டு வாத்தகம் கொள்ளைலாபம் தரும். கள்ளமார்க்கட் நன்கு இயங்கும்.

உத்தியோகத்தர்கட்கு சூரியன் 10ல் திக்பல பெறுவதால் பலவிதத்திலும் நன்மையே. பதவி உயர்வு அந்தஸ்து உயர்வு என்பன ஏற்படலாகும். அதிகாரிகள் சாதகமாக நடந்துகொள்வர்.

விவசாயிகட்கு சனி 9ல் உச்சமடைவதாலும் சூரியன் திக்பலம் அடைவதாலும் கைவிட்ட பயிர்ச்செய்கையைக்கூட திரும்ப வெற்றிகரமாகச் செய்யலாம். புதுப்பயிர்கள் நட மிக விசேடமான காலம்.

தொழிலாளர்கட்கு காலம் திருப்திகரமாக இருக்கும். புதுத்தொழில்கள் கிடைத்தவண்ணமிருக்கும். தொழில் மாற்றம் செய்ய ஏற்ற சந்தர்ப்பம். ஆயுத பாவிப்பிலுள்ளோர் அவதானமாக இருக்கவும்.

மாணவர்கட்கு ஞாபக சக்தியுடன் கூடிய ஊக்கம் கல்வியில் நல்ல முன்னேற்றத்தைத் தரும். உயர்கல்வியில் பட்டங்கள் பெறலாம். பிறநாட்டில் கல்விகற்போர் நற்பலனடைவர். அறிஞர்களின் உதவிகள் தாராளமாக இருக்கும்.

பெண்களுக்கு விவாகப் பேச்சுக்களை நாடியிருப்போருக்கு ஓர் வரப்பிரசாதமான காலமாகும். சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தின் மங்கல கருமங்களுக்கு வழிபிறக்கும். தொழில் தேடுபவர்களுக்கு நல்ல வாய்ப்புகளுண்டு.

அதிஷ்ட நாட்கள்: நவ 24பி.ப,25,26மு.ப, டிச 5பி.ப,6,7.

துரதிஷ்ட நாட்கள்: நவ 29,30, டிச3,9,10மு.ப.




பூரட்டாதி 4-ம் கால், உத்தரட்டாதி, ரேவதி

மீனராசியைச் சேர்ந்தோர்க்குச் சூரியன் சுவர்ண மூர்த்தியாக ராஜபவனி வருவதால் அட்டமத்துச் சனியால் படும் தொல்லைகளுக்கு நிவாரணம் கிடைக்கும். ஆரோக்கியச் சீர்கேடுகள் அறவே நீங்கும். திட்டமிட்ட கருமங்களை 7-ல் செவ்வாயும் சுக்கிரனும் தடைபண்ணினும் இறுதியில் வெற்றி உங்களுக்கே, திரிகோணராசிச் சூரியனால் அவமானம், அவமரியாதை என்பன அற்றுப் போகும். இனத்தவரின் உதவிகள் கிடைக்

கும். தெய்வ வழிபாட்டால் நல்ல பலனை அடைலாம். 9-ல் வியாழன் தூரதேச தொடர்புகளுக்கு நன்று.

குடும்பஸ்தர்கட்கு குடும்பாதிபன் செவ்வாய் 7-ல் களத்திர சுகத்தைக் கொடுப்பினும் சூரியனுல் மனச்சந்தோஷமடைய முடியாது. கொண்டாட்டங்கள் பொருளாதார ரீதியில் லாபத்தைத் தரும். கடன் தொல்லைகள் குறையும்.

வியாபாரிகட்கு புதன் திரிகோணராசியில் வெளிநாட்டு வர்த்தகத்தில் எதிர்பார்த்த லாபத்தைக் கொடுக்கும். வியாபார ஸ்தலங்களை விஸ்தரிக்க வசதிகள் கிடைக்கும். கள்ளமார்க்கட்டில் நல்ல லாபம் கிடைக்கும்.

உத்தியோகத்தர்கட்கு அரச வட்டாரங்களில் இழந்த செல்வாக்கை மீண்டும் பெற்றுக்கொள்ள கிரகங்கள் உதவும். அதிகாரிகளின் உளமார்ந்த அனுசரணையுண்டு. மாற்றம் சம்பந்தமான நடவடிக்கைகளில் இறங்கலாம்.

விவசாயிகட்கு அட்டமத்துச் சனியையிட்டு கவலைப்படத் தேவையில்லை. 9-ம் இடம் பலமாக இருப்பதால் முன் பட்ட கடன்களுக்கு சிறுலாபங்கள் கிடைக்கும். வயல்வேலைகளில் ஒழுங்காக ஈடுபடின் நற்பலனுண்டு.

தொழிலாளர்கட்கு முயற்சிக் கேற்ற வேதனம் கிடைக்கும். முதலாளிகள் உங்கள் கோரிக்கைக்குச் செவிசாய்ப்பர். அரச ஒப்பந்தங்கள் சிறுதாமதத்துடன் நிறைவேறும்.

மாணவர்கட்கு புதன் 9-ல் பரீட்சைகளில் சாதகமான பலனைத் தரும். உயர்கல்வியில் உற்சாகம் உயரும். வெளி நாட்டு கல்வி முயற்சிகள் தடைப்பட்டு இருந்தவர்களுக்கு விடிவு காலம் பிறக்கும்.

பெண்களுக்கு விவாக முயற்சிகள் கைகூடச் சந்தர்ப்பங்கள் கிடைக்கும். காதல் விவகாரங்களில் பிரச்சனைகள் தோன்றினும் சமரசத்தீர்வு ஏற்படும். தொழில் பார்ப்போருக்கு காரியாலய சூழலில் எதிர்காலத்தைத் திட்டமிடக் கூடியதாக இருக்கும்.

அதிஷ்ட நாட்கள்: நவ 26 பி. ப. 27, 28,
டிச 8, 9, 10மு. ப.

துரதிஷ்ட நாட்கள்: டிச 1, 2, 10 பி. ப, 11, 12.

# இலங்கைச் சோதிட ஆய்வு மன்றம்

ஷெ சங்கத்தின் ஐப்பசி மாதக் கூட்டம் 30-10-83ல் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் மாலை 4-05 மணியளவில் திரு ந. கந்தசாமி ஐயரின் தலைமையில் ஆரம்பமாயிற்று. சென்ற கூட்ட அறிக்கையும் பொருளறிக்கையும் வாசித்த பின் பிரதம பேச்சாளராகிய திரு செ. ந. நடராஜன் அவர்கள் ''காலவிதானம் – சில அம்சங்கள்'' என்ற பொருள் பற்றி ஒரு விரிவுரை செய்தார். அதில் காலவிதானம் என்றால் என்ன அதை எப்படி உபயோகிக்கிறார்கள். ஏன் உபயோகிக்கிறார்கள்? என்றெல்லாம் நன்கு விளங்க வைத்தார். சங்கல்பம் செய்யும் போதும் இக்காலவிதானம் கூறப்படுவதைக் கிரந்த மூலம் கூறிக்காட்டினார். சமய சடங்குகள், ஜோதிடம், வைத்தியம், இதிகாசம், புராணங்களிலெல்லாம் எடுத்துக் காட்டுகளும் உதாரணங்களும் காட்டி காலவிதானம் பாவிக்கப்படுவதைக் காட்டினார். எந்தக் கருமம் செய்யமுன்பும் காலவிதானம் இல்லாமல் செய்யக் கூடாதென்றும் அதற்கு உதாரணங்களும் காட்டினார். விசேடமாக கல்வி ஆரம்பம், தொழிலாரம்பம், சத்திர சிகிச்சை, விரதம் கோவில் வழிபாடுகள், விவாகம்; பிரயாணம் முதலியன வற்றைப்பற்றி விளக்கினார். பின்பு இது பற்றிக் கலந்துரையாடல் நடைபெற்றது.

அடுத்த கூட்டம் 27-11-83ல் நடக்கும். அன்று காலசர்ப்பயோகம் பற்றி ஓர் கருத்தரங்கு ஆய்வு நடத்தப்படும்.

முக்கியகுறிப்பு:

சோதிடமலரில் வெளியாகும் கட்டுரைகளில் வரும் கருத்துக்கள் கட்டுரையாளரின் சொந்தக் கருத்துக்களேயாகும். கட்டுரையாளர்களின் கருத்து வேறுபாடுகளுக்கு ஆசிரியர் பொறுப்பாளியல்லர்.

# அதிஷ்ட எண் ஞானம்

இ. மகாதேவா 140, செல்லர் வீதி, நல்லூர் யாழ்ப்பாணம்.

## எண் 4 இராகு

ஐரோப்பிய நாட்டு எண் ஆராய்ச்சியாளர்கள் யுரேனஸ் என்ற கிரகத்தை 4-ம் எண்ணுக்கு அதிபதியாக்கினர். ஆனல் எமது கிழ் நாட்டு சோதிட சாஸ்திரங்களில் இராகு என்ற சாயக் கிரகத்தைக் குறிப்பிட்டுள்ளனர். சோதிட சாஸ்திரத்தில் பிணி காரகன் என வர்ணிக்கப்படும் இவருக்கு தமம், பாழ்பன், கறுப்பன் எனப் பல நாமங்கள் உண்டு. விருச்சிக இராசியை உச்ச வீடாகவும், கடக இராசியை யோக வீடாகவும் கொண்டவர்.

## எண் 4 ஆதிக்கர்கள்

எந்தவொரு மாதத்திலும் 4, 13, 22, 31-ம் திகதிகளில் பிறந்தவர்களும் ஜூலை 21 - ஆகஸ்ட் 28 வரையும் பிறந்தவர்கட்கும், கூட்டு எண் ஒற்றை எண் 4 உடையவர்களும் எந்த வாரங்களிலாவது இராகு காலத்தில் பிறந்தவர்களும் இந்த எண் ஆதிக்கர்களாவர்.

## (அ) எண் 4-ன் குண இயல்புகள்

வாழ்க்கையின் முடிச்சுக்களைத் துருவி ஆராயும் இவர்கள், சாதுரிய புத்தி மிக்கவர்கள், திருமணக்காரியங்கள், ஒப்பந்தப் பேச்சுவார்த்தை என்பவற்றில் முன்னின்று உழைப்பர். சிம்மக் குரலில் வாதிடவல்லவர். உலக நடைமுறைகளுக்கு ஏற்றால் போல் நவநாகரீகமாகத் தோன்றுவார்கள். எண் 1ஐ உடையவரைப் போன்று நிர்வாகத் திறமையும் செறிந்திருக்கும். தன்மானம், கௌரவம், மனச்சாட்சி என்பவற்றைச் சந்தர்ப்பத்திற்கேற்ப மாற்றிக் கொள்வர். உலகப் பொருட்களில் அதிக ஈடுபாடும்; ஆசையும், இருப்பதால் பிரச்சனைகளைத் தேடிக்கொள்வர். தலைமைப் பதவி, புகழ் என்பன கிடைப்பதற்காக, பணத்தையும், காலத்தையும் தாராளமாகச் செலவழிப்பர். இந்தவகையில் சமூகசேவை புரட்சி, சீர்திருத்தம், போராட்டம் என்பவற்றிற்கும் தலைமை தாங்குவர். புதிய புதிய கண்டு பிடிப்புக்களை, மாற்றங்களைச் செய்து சொண்டிருப்பார்கள். தமது ஆசைப் பொருட்களை வாங்குவதற்கும் அதிகம் செலவிடும் இவர்கள் பாவம், பழிக்கு இரங்கி பணத்தை வெளியே விடமாட்டார்கள். இவர்கள் விடயங்களை ஜீரணித்து, வேண்டும் பொழுது வெளியிடத் தெரியாதவர்கள். குற்றம், குறைகளை உடனுக்குடன் சொல்லி விளைவை எதிபாராமல் தம் முடிவையும் தெரிவித்து விடுவார்கள். எளிதில் உணர்ச்சி வசப்பட்டு, படபடக்கும் தன்மையுடையவர்கள். இதனல் சமூகத்தில் பலரும் இவரை விரோதிப்பர். மற்றவர்களின் மனத்தை நோகச் செய்வதால் அவர்களின் சாபத்தைத் தேடிக் கொள்ளுகின்றார்கள். இதனல் வாழ்க்கையில் தடைகளையும், முன்னேற்றம் இன்மையையும் சந்தித்தபடி இருப்பார்கள். பொதுவாக இவர்களுக்கு பொருளாதாரக் கஷ்டங்கள் அடிக்கடி ஏற்பட்டபடி இருக்கும்.

வெஞ்சொல் பொறுக்காத இவர்கள், பிறருக்குப் பணிந்து தொழில் செய்யாது சுதந்திரமாகத் தொழில் செய்ய விரும்புவர். எக்கருமத்தைச் செய்யும் பொழுதும் தமக்கென ஒரு பாணியை வைத்திருக்கும் இவர்கள், தம் இன்ப, துன்ப கஷ்ட, நஷ்டங்களை உண்மை நண்பர்களிடம் சொல்லி ஆறுதல் அடைவர். 1-ம் 8-ம் எண்காரர்கள் இவர்களுக்கு உதவி கேட்காமலே பலவுதவிகளைச் செய்து கொடுப்பார்கள். இவர்களும் அவர்களுடன் கௌரவமாக நடந்து கொள்வார்கள். தம் உடலில் கவனம் செலுத்தும் இவர்கள், உணவில் சிரத்தை இருப்பதோடு கஷ்டமின்றி முன்னேறத் தெண்டிப்பார். எதையும் விரைவில் நம்பாத இவர்கள், இரகசியங்களையும் காப்பாற்றமாட்டார்கள். ஆதிக்கம் குறைந்தவர்கள் சோம்பேறிகளாகி விடுகின்றார்

கள். எக்கருமங்களிலும் எவராவது ஊக்கப்படுத்த வேண்டியிருக்கும். தமக்குரிய இடம் கிடைக்க வில்லையே என்று ஒதுங்கி இருப்பார்கள். கௌரவம் குறைந்து இழிநிலையில், குடும்பப் பொறுப்பு அல்லது பிரிவு பாரச்சுமையாகி வாழ்ந்து வருவார்கள். இவ்வாதிக்கரை தெய்வபக்தியும், தெய்வத் தொண்டும் புடம் போட்டு ஞானிகளாக்கும்.

## எண் 4 தொழில்

அரசாங்கப்பதவிகள், விஞ்ஞான, பொறியியல், வாகனம், தட்டச்சு மில் இயந்திரத்தொடர்பான தொழில்கள், புகைப்படம், மின்சாரம், றேடியோ, தபால், தந்தி, பத்திரிகை, கட்டிட ஒப்பந்த இடங்களில் தொழில் நுட்பத் தொடர்பு, சட்டத்துறை தரகுத் தொழில் சமுதாயத்தைச் சீர்திருத்தும் எத்துறையிலோ அல்லது கலையிலோ நாட்டம் இருக்கும். உடற்பயிற்சி, சர்க்கஸ் அரசியலில் புகழடைவர். விற்பனையாளர்கள், உணவு விடுதி நடத்துபவர்கள், இரசாயன மருந்துத்தொடர்பு இரும்பு, உரம், மரச்சாமான்கள், தையல், கைத்தொழில் தொடர்பான தொழில்களில் நாட்டமும் முன்னேற்றமும் உண்டு. மக்களுக்கு அன்றாடம் தேவையான பொருட்களை உற்பத்தி செய்தோ, விற்பனை செய்தோ அதிக பொருளைச் சம்பாதிக்க முடியும்.

## பிறந்த திகதியும் பலன்களும்

**4-ம் திகதி:-** படபடப்பாக பட்டாசு கொழுத்திய மாதிரிப் பேசுவர். தம்மை எல்லோரும் மதிக்க வேண்டும். எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் எல்லோரும் தமது கருத்தை ஏற்கவேண்டும். என நினைப்பர். தமது சுகத்திற்காக சுயநலத்திற்காக மற்றவர்களை அதிகம் புகழ்வர். குடும்பத்தில் போராட்டம் இருக்கும். ஆனால் குடும்பத்தவர்களை நேசிப்பர். எந்த விசயத்திலும் அளவுக்கு அதிகமாக அனுபவிக்கத் துடிப்பர். பல்வலி, வயிற்றில் வருத்தம் இருக்கும். சமூகசேவைகளில் பேருக்காக முன்னுக்கு நிற்பார்கள். உண்மையில் மனப்பூர்வமாக எதிலும் ஈடுபாடு இராது. தம்மைப் புகழ்பவர்களை நாடி ஓடுவர். இல்லாவிடில் தூற்றுவர். 1-ம் எண்காரருடன் அன்பு செலுத்துவர். குடும்பத்தில் 9-ம் எண்ணுடையவர்களின் தொடர்பிருக்கும்.

## 13-ம் திகதி

அதிகாரத்தாலும், அறியாமையாலும் பலரை வேதனைப்படச் செய்வர். படபடப்பையும், கோவிப்பதையும், கோள் சொல்வதையும் தவிர்க்க வேண்டும். குடும்பத்தில் அமைதி குறைவு. எதிர்பாலாரின் தொல்லைகள் ஏற்படும். காணி, பூமி, பொருள் சம்பந்தமான பிரச்சனைகளை சமாதானமாகத் தீர்க்க வேண்டும். நேர்மை நீதியைக் கடைப்பிடித்தால் அமைதி ஏற்படும். ஏட்டிக்குப் போட்டியாக இருந்தா[illegible] வழக்கு விசாரணைகளால் அவதிப்படுவார்கள். [illegible]விதிவசப்பட்ட சில பலன்கள் நடக்கும்.

## 22-ம் திகதி

இவர் பிறந்த குடும்பத்திலும், புகுந்த குடும்பத்திலும் அடிக்கடி துன்பப்படுவர். தனது வாழ்க்கையைக் கெடுப்பவர்களைத் தெரிந்தும், பேசாமல் இருப்பர். ''உலகே மாயம் வாழ்வே மாயம்'' என எண்ணி இறைவனே துணை என்று பேசாமல் இருப்பர். பொருட் செலவு ஏற்படும். பலவிதப் போராட்டம், ஆபத்துக்கு மத்தியிலும் மனத்திருப்தியுடன் வாழ்வர். குறுக்கு வழியில் பொருட்களைச் சம்பாதிக்க முடியுமாயின் அதிலும் ஈடுபடுவர். நல்லவர்கள் கண்ணியவான்களாக, பிறரால் மதிக்கப்படுவர். இவர்களின் நற்குணத்தை சிலர் தவறாக எண்ணி, இவர்களை வீண் சச்சரவில் மாட்டிவைக்க முயற்சிப்பார்கள். எனவே கவனமாக இருக்கவும். பிறர்வாழ நல்ல ஆலோசனைகளைக் கூறும் (சட்டவாதிகள் போன்று) இவர்கள் தாங்கள் துன்பத்தில் வேதனைப்படுவர்.

## 31-ம் திகதி

துறவிகளின் வாழ்வு நிலை ஏற்படும். எதையும் தாங்கிக் கொள்ளும் இவர்கள் சிலசமயம் மிகவும் பரபரப்பு அடைந்து எவராலும் செய்ய முடியாத, செய்யக்கூடாத காரியங்களைச் செய்து மேல் கீழ் நிலைகளை அடைவர். கற்பனையில் வாழ்வர். பொருளாதார இடங்களில் பிறந்தால் சோம்பேறிகளாக வாழ்வர். மற்றவர்களை அதட்டிக் காரியங்களைச் சாதிப்பர். நகம், கை, சீலை, பேப்பர், பென்சில் எதையாவது சிறுவயதிலிருந்தே கடித்துக் கொண்டிருக்கும் பழக்கமிருக்கும். பெற்றோர்கள் இதைத்தடுக்க வேண்டும். இல்லாவிடில் வாயில் முரசுகரைதல் வயிற்றுக்குத்து, பூச்சியாதிகளால் வருந்துவர். மனோசக்தி, கற்பனை மிகுந்த இவர்கள் தமது வாழ்க்கையை நல்ல பாதையில் சுயமுயற்சியில், நல்வழியில் அமைத்துக் கொள்வது மிக முக்கியமாகும். (தொடரும்)

| | | | |
|---|---|---|---|
| நி | ச் | ச | யி |
| பவானி | | | க் |
| ன | **திருமணங்கள் சொர்க்கத்தில்** | | க |
| ற | | | ப் |
| ன் | கி | டு | ப |

(சென்ற இதழ் தொடர்)

பிறந்த நேரத்தை வைத்துக் கொண்டு சாதகத்தை கணித்தால் பலன்கள் அனேகமாக சரி வருவதில்லை. அதனுல் நேரத்தை சுத்திகரித்து கணித்தல் வேண்டும்.

கொடுக்கப்படும் நேரம் சரியானதாக இல்லாவிடில் பாவமுனைகள், உப நட்சத்திராதிபதிகள், பலன்கள் யாவும் மாறிவிடுகின்றன.

இங்கு ஆராயப்படும் சாதகங்கள் எல்லாம் சுத்திகரிக்கப்பட்ட பின்பேதான் ஆராயப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| I 21 30<br>ரா 9 51 | II 23 49 | III 21 59<br>புத 20 18<br>சுக் 2 41 | சூரி 8 42<br>யுரே 11 55<br>IV 18 21 |
| XII 16 55<br>குரு 14 22 | 24-06-1950<br>[ 9° வ 49′ 80° E 14′ ]<br>ஜனன நேரம்:<br>அதிகாலை 0-49-27<br>பொ. நே.<br>அயனும்சம் 23° 04′ | | V 15 52 |
| XI 15 52 | | | VI 16 55<br>சனி 20 49 |
| X 18 21 | IX 21 59 | VIII 23 49 | கே 9 51<br>செவ் 11 43<br>சந் 16 16<br>VII 21 30<br>நெப் 21 31 |

ஜனனத்தின் போது நின்ற தசை:

சந்திர தசை 5 வரு. 3 மா. 18 நா.

| கிரகங்கள் | நட்சத்திராதிபதி | உபநட்சத்திராதிபதி |
|---|---|---|
| சூரியன் | இராகு | குரு |
| சந்திரன் | சந்திரன் | சனி |
| செவ்வாய் | சந்திரன் | செவ்வாய் |
| புதன் | சந்திரன் | கேது |
| குரு | இராகு | புதன் |
| * சுக்கிரன் | சூரியன் | குரு |
| * சனி | சுக்கிரன் | குரு |
| இராகு | சனி | சுக்கிரன் |
| கேது | சூரியன் | சுக்கிரன் |
| யுரேனஸ் | இராகு | சனி |
| நெப்ரியூன் | சந்திரன் | சுக்கிரன் |

இராகு தசை 12-10-1962-ல் ஆரம்பமாகி 12-10-1980-ல் முடிவுற்றது.

சுக்கிர இராசி சூரிய நட்சத்திரம் குரு உப நட்சத்திரத்தில் சனி நிற்கின்றுன். இதனுல் சுக்கிரனும் சனியும் இரட்டையர்கள் போல் ஒரே விதமான பலனைச் செய்வார்கள்.

உதயலக்னம் 21° 30′ மீனத்தில் அமைகிறது. அதனுல் சாதகர் தோட்டம், நாற்று, விதைக்காய் (Gardens, Nurseries, Etc) முதலியவைகளுடன் சம்பந்தப்படல் வேண்டும்.

10-ம் பாவமுனை 18° 21′ தனுசில் அமைகிறது. அதனுல் கர்மம் விஞ்ஞான முறையில் அல்லது நுட்பரீதியில் செயல்படும்.

10-ம் பாவமுனை இராகு உபநட்சத்திரத்தில் நிற்கிறது. அதனுல் தொழிலின் இரகசியங்களை இராகு தான் விளக்க உதவுவான்.

இராகு 12-ம் வீட்டில் நிற்கிறுன். 12-ம் வீடு கனவு, விரயம், வைப்பு, சயனசுகம், முதலியவைகளைக் காட்டும்.

இராகு 9° 51′ கும்பத்தில் நிற்கிறுன். இந்நிலை (Tradesman, Merchants Etc) வியாபாரிகளைக் குறிக்கும். இது " திருக்கணிதம் ". ஞானக்கண்ணுல் தீர்மானிக்கவில்லை. இராகு சனியின் நட்சத்திரம், சுக்கிர உபநட்சத்திரத்தில் நிற்கிறுன். சனியும் சுக்கிரனும் முறையே 6-ம், 2-ம் வீடுகளில் நிற்கிறுர்கள். அதனுல் பொதுவாக இவரின் தொழில் இலாபத்தை அளிக்கும். உண்மையில் தோட்டத்தில் விளையும் பொருட்களை நல்ல விலைக்கு விற்று பணத்தை வைப்பில் போடுவதில் சாதகர் கெட்டிக்காரர். மறைமுகமாக நுட்பமான முறையில் பொருட்களை விற்பதிலும் வாங்குவதிலும் வல்லவர்.

இராகு 2-ம் முனையையும் 12-ம் முனையையும் ஆளுவதால் அவன் காலத்தில் மேலதிகப் பண மெல்லாம் சேமிப்பாக மாறுகிறது. இதே இராகு 7-ம் முனையில் ஆதிக்கம் செலுத்துவதால் அவன் காலத்தில் திருமண வாழ்க்கை பாழாகிறது. எப்படி......?

7-ம் வீட்டிற்கு 6-ம், 8-ம், 12-ம் வீடுகளுடன் இராகு தொடர்பு பெறுவதால் திருமண வாழ்க்கை பாழாகிறது. குருவின் காலத்தில் ஓரளவு நன்கு அமைகிறது.

5-ம் வீடு ஆசைகள், ஆர்வம் முதலியவை களைக் குறிக்கும். அதன் பாவமுனை சனி நட்சத் திரம் குரு உபநட்சத்திரத்தில் அமைகிறது. சனி யும் குருவும் முறையே 6-ம், 11-ம் வீடுகளில் நிற்கிறார்கள். சனியும் சுக்கிரனும் இரட்டையர் கள் என்று கூறியிருந்தேன். சுக்கிரன் 2-ல் நிற்கி றார். இதனால் இவரின் ஆசைகள் நிறைவேறு கின்றன. அதனால்தான் காணி, பூமி, வாகனம் சுலபமாகக் கிடைத்தன.

பங்காளர்கள், வியாபாரிகள் முதலியோரை 7-ம் வீடு குறிக்கும். அதன் அதிபதி புதன். புதனை சனி தியபார்வையினால் தாக்குகின்றான். அதனால் அவர்கள் மடங்குகின்றார்கள். இவர் இலாபம் அடைகிறார். புதனும் சனியும் பொய், புரட்டு, ஏமாற்றுதல் முதலியவைகளைக் குறிக் கும். இதனால் தான் இரண்டாயிரத்திற்கு வாங் கிய பொருளை மறுநாளே ஐயாயிரத்திற்கு விற்க முடிந்தது. பேராசைதான் காரணம்! 5-ம் வீடு ஒத்துழைக்கின்றது. அதனால் பேராசை நிறை வேறுகிறது. பெண்ணே விரும்பாதபோது அவ ளைக் கட்டிய மறுநாளே அல்லல் பட்டதும் பேராசை வடிவில் விதியின் விளையாட்டாகும். சாதகரை காணும் போதெல்லாம் எனக்கு ஒரு கதை நினைவுக்கு வரும். ஒரு மன்னன் ஒரு வள மான நிலத்தைக் காட்டி "இந்த நிலத்தில் ஒருவன் எவ்வளவுதூரம் ஓடிச் சுற்றி வருகின் றானோ அவ்வளவு நிலமும் அவனுக்கே" என்று அறிவித்தான். ஒரு மனிதன் ஓடத்தொடங்கி னான். இன்னும் நிலம் வருமே என்ற பேராசை அவனை பிடித்துக் கொண்டது. அதனால் ஓடினான்; ஓடினான்; வாழ்க்கையின் ஓரத்திற்கே ஓடினான். இறுதியில் அவனுக்கு அவ்வளவு நிலமும் தேவைப் படவில்லை. ஆறடி நிலமே தேவைப்பட்டது.

7-ம் முனை சுக்கிர உபநட்சத்திரத்தில் நிற் கிறது. சுக்கிரனும் சனியும் இரட்டையர்கள் என்று கூறியிருந்தேன், இவர்கள் நின்ற வீட்டுப் பலன்கள் 7-ம் வீட்டிற்கு மனைவிக்கு சாதகமாக அமையவில்லை. அதனால் அவள் வெறுத்தாள்.

சனி சஞ்சாரம் சுக்கிர உப நட்சத்திரத்தில் இராகு நிற்பதால் 7-ம் முனையிலும் இராகு வலிமையான ஆதிக்கம் செலுத்துகின்றான்.

2-ம், 7-ம், 12-ம் பாவமுனையில் ஆதிக்கம் செலுத்தும் இராகு 12-ல் நிற்பதால் அவன் காலத்தில் ஏற்பட்ட கல்யாண பந்தம் முறிந்து போய் விடுகின்றது.

கொடுத்தவனே பறித்து விட்டான்!

இச்சாதகரின் திருமணம் இராகுதசை சந்திர புத்தி சந்திர அந்தரத்தில் 8-5-1978-ல் நடை பெற்றது. திருமணமாகிய மறுநாளே பிரச்சனை தலைதூக்கி ஒரு வாரத்திலேயே செவ்வாய் அந்தரத் தில் பிரிவு ஏற்பட்டது.

இராகு, சந்திரன் முதலியோர் 6-ம், 7-ம், 11-ம் முனைகளில் ஆதிக்கம் செலுத்திய படியால் பெண்ணின் விருப்பத்திற்கு எதிராக திருமணம் நிறைவு பெற்றது.

செவ்வாய் அந்தரம் வந்தபோது 6-ம், 12-ம் வீடுகளின் பலன்கள் வலிமையாயிருந்தபடியால் திருமணம் முறிந்துபோய் விட்டது.

இவைகள் யாவையும் சுலபமாகவும் சுருக்க மாகவும் நெப்டியூன் காட்டி விட்டான். எப்படி...?

நெப்டியூன் 7-ம் முனையில் நின்ற படியால் திருமணம் அல்லோல கல்லோலப் பட்டது.

வேறு திருமணம் உண்டா.........? அதையும் 7-ம் முனைநின்ற உபநட்சத்திராதிபதி தான் தீர் மானித்தல் வேண்டும்.

இந்த உபநட்சத்திராதிபதி இரு மடிப்புள்ள இராசியில் (Dual Sign) நிற்க வேண்டும், அல் லது இருமடிப்புள்ள இராசி அதிபதியின் நட்சத் திரத்தில் அல்லது அதன் உபநட்சத்திரத்தில் நிற்குமானால் பல திருமணங்கள் உண்டாம்.

7-ம் முனை சுக்கிர உபநட்சத்திரத்தில் நிற்கி றது. சுக்கிரனும் சனியும் இரட்டையர்கள் என்று முன்பு குறிப்பிட்டேன். இதே வேளையில் இரு மடிப்புள்ள இராசியதிபதியாகிய குருவின் உப நட்சத்திரத்தில் சுக்கிரன் நிற்பதால் மறு திரு மணம் உறுதியாகிறது.

அதனால் மறு திருமணம் குருதசை குரு புத்தி குரு அந்தரத்தில் 1980-ம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் நடைபெற்றது. (தொடரும்)

# செவ்வாய் தோஷம்

வ. சின்னத்துரை, நல்லூர்.

(சென்ற இதழ் தொடர்)

அங்கார தோஷத்திற்கு இம்மட்டு முக்கியத்துவம் அளிப்பவர், தமிழ் மக்களும், சிங்கள மக்களும், மலையாள மக்களுமே ஆவர் என்பது இன்றைய ஆராய்ச்சியாளர்களின் கருத்து. சோதிடஞ் செழித்தோங்கும் வங்காளத்தில் அத்தோஷத்திற்கு உயர்வளிப்பதில்லை; மதிமாண்புள்ள மகாராஷ்டிரத்தில் அதற்கு மதிப்பில்லை. கலை வளருங் கன்னடத்திற் கதியில்லை. ஆன்ற அறிவிலங்கும் ஆந்திரத்தில் அவசியமில்லை.

தொல்லுலகில் தலையெடுத்த தமிழரோ செவ்வாய்க்குத் தயங்க வேண்டும்? சில நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்த தமிழரின் நாடி ஏடுகள் இன்றைய சோதிட உலகை வியக்கச் செய்கின்றன. அத்தகைய தமிழர், கலைவளர்ச்சியைக் கைவிட்டதனுல் இன்று செம்மை சான்ற செவ்வாய்க்குத் திகைக்கின்றனர்.

என்னத்திற்காக செவ்வாய் தோஷத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்? சந்திர தோஷம், சூரிய தோஷம், அல்லது வேறு எந்தக் கிரகத்திற்கும் தோஷம் பாராதவர்கள் ஏன் செவ்வாய்க்கு மாத்திரம் தோஷம் பார்ப்பான்? மற்றத் தோஷமுள்ள கிரகங்கள் செய்யாத கெடுதல்களையோ செவ்வாய் தோஷம் செய்துவிடும்? சில சோதிடர் செவ்வாய்க்குள்ள கெட்ட பலன்களை மிகைபடக் கூறிவிடுகிறுர்கள். கீழ்க்காணும் தன்மைகளை அவர்கள் கவனிப்பதில்லை.

1. செவ்வாயின் குணுதிசயங்கள் எவை?
2. எந்த வீட்டுக்கு செவ்வாய் ஆள்பதியாகிறுன். அந்த வீட்டை சொந்தமாக்குவதால் அது துர்க்கிரகமாக அல்லது நற்கிரகமாகிறதா?
3. எந்த வீட்டை செவ்வாய் சென்றடைகிறது? அது சாதகமான வீடா பாதக்மானதா?
4. செவ்வாயின் தோஷங்கள் எந்த ராசியில் நின்ருலும் ஒரே விதமாகவிருக்குமா?
5. சர, ஸ்திர உபய ராசிகளில் நிற்பதால்? செவ்வாயின் தோஷங்களில் மாற்றமில்லையா?
6. இதர வீடுகளில் செவ்வாய் உறைவதால் அதன் துர்ப்பலன்களில் மாற்றமில்லையா?
7. களத்திரத்தின் பிரிவு, கைம்மையை விட வேறு துர்க்குணங்கள் செவ்வாய்க்கு விவாக வாழ்க்கையில் இல்லையா?
8. உச்ச வீடு, சொந்த வீடு, நட்பு வீடு, பகை வீடு, நீச வீடுகளில் செவ்வாய் இருந்தால் அதன் தோஷத்தால் நன்மைக்கு மாற்றம் இல்லையா?
9. செவ்வாய்; தோஷமுள்ள வீடுகளில் உறைந்தாலும் நற்கிரக சேர்க்கையுடனே அல்லது பார்வை பெற்றதால் அதற்கு நிவிர்த்தி இல்லையா?
10. செவ்வாய் தோஷமில்லாத வீடுகளிலுறைந்தாலும் வேறு கிரகத்தின் கெட்ட பார்வை செவ்வாயின் நற் சான்றைக் கெடுக்காதா?
11. செவ்வாய் இராஜயோக வீடுகளை சொந்தமாக்கினுலும் அதற்கு தோஷமுண்டா?
12. அது கெட்ட வீடுகளுக்கு அதிபதியாயிருந்தும் நல்ல வீட்டிலுறைவதால் அதற்கு தோஷமுண்டாகாதா?
13. செவ்வாய் உறையும் வீட்டை லக்கினத்திலிருந்தா அல்லது சந்திரனிலிருந்தா எண்ணுவது?
14. தோஷமிருந்தால் அத்தோஷத்தால் வரும் கெடுதி எத்தன்மையானது?
15. இந்தச் செவ்வாய் தோஷத்தின் பலன் சீவியம் முழுக்க இருக்குமா அல்லது குறிப்பிட்ட ஒரு காலத்திற்கு மாத்திரம் இருக்குமா?
16. இரு சாதகத்திலும் செவ்வாய் தோஷமிருப்பின் விவாகத்தின் பின் இருவருக்கும் என்ன விதப் பலன் நடக்கும்?
17. ஒரு சாதகத்தில் தோஷமிருந்து மற்றதில் தோஷமின்றேல் விவாக வாழ்க்கை எப்படி அமையும்?
18. இரு சாதகர்களுக்கும் செவ்வாய் தோஷமில்லாவிடில் சந்தோஷமான, ஒற்றுமையான, மண வாழ்க்கை உத்தரவாதமா?

19. 2, 7, 11 வீடுகள்தான் மணத்தையும் மண வாழ்க்கையையும் குறிப்பன. இந்த வீடுகளில் நற் கிரகம் நிற்க செவ்வாய் தன் தோஷத்தை காட்டுமா?

செவ்வாயைப் பற்றி பயம் கவலை வேண்டாமென்பதற்கு உதாரணங்களும் விளக்கங்களும் பின்வருமாறு.

மேடம், விருச்சிகம் என்னும் இரு ராசிகளை செவ்வாய் ஆட்சி செய்கிறது. இந்த இரு ராசிகளிலும் பிறந்தவர்கட்கு செவ்வாய் லக்கினாதிபதியாய் அமைவதால் செவ்வாய் இவர்களுக்கு ஒரு நற்கிரகமாகும். ஆனால் உண்மை அதுவல்ல. மேட விருச்சிக லக்னகாரருக்கு செவ்வாய் 8ம், 6ம் வீட்டுப் பலன்கள் கட்டாயம் வந்து சேரவே சேரும்.

ஆனால் கடகம், சிங்கம், தனுசு, மீனத்தில் பிறந்தவர்கட்கு, செவ்வாய் ஒரு இராசயோகியும், நற்கிரகமாகவும் அமையும். அது சமாதானம் முன்னேற்றம், அபிவிருத்தி, செழிப்பு முதலிய வற்றை உண்டாக்கும். ஆனால் புதன்வீடாகிய மிதுனம், கன்னியில் பிறந்தவர்கட்கு செவ்வாய் ஓர் துர்க்கிரகமாய் அமையும். விசேடமாக கன்னி லக்கினகாரருக்கு, வெள்ளியின் வீடுகளாகிய இடப, துலா லக்கினகாரருக்கு செவ்வாய் அநுகூலமான கிரகம் அல்ல. சனியின் வீடாகிய மகர, கும்ப லக்கினகாரருக்கு செவவாய் உலக இன்பங்களையும் உலகாயித நன்மைகளையும் புரியும் நற்கிரகமாயமையும்.

## செவ்வாயின் இயற் குணம்

சாதகமான வீடுகட்கு அது அதிபதியாகும் போது சாதக வீடுகளில் அது உறையும்போது அது ஓர்மம், துணிவு, மேலே முன்னேறு என்பதைக் கொடுக்கும். திடமான ஆரோக்கியத்தை நல்கும். எடுத்த காரியத்தில் வெற்றி, விரோதிகளை வெல்லல், எல்லாம் உறுதிப்படுத்தப்படும். சகோதரர்களிடமிருந்து உதவி பெறல், காணி, பூமி, வீடு வாசல்களிலிருந்து பெரும் வருமானம் கொடுக்கும் செவ்வாய் சாதகத்தில் வாய்ப்பான இடத்தில் நிற்க வேண்டும்.

6, 8, 12ம் வீட்டுக்கதிபதியாயும் அல்லது அவற்றில் உறைவதாலும் கர்வமுள்ள, அக்கிரமமுள்ள, வைராக்கியமுடையவராக்கும். ஊதாரிக் குணமுள்ள, அவசரமான, தறுதலையான ஆளாக்கும். அவசரம், நாசத்தை உண்டாக்கும். மதிப்பு, பணம், அந்தஸ்தை இழப்பர். விரோதம், நஷ்டங்கள் செவ்வாயின் தீச்செயல்களாகும். விபத்து, காயமேற்படல், தீயினால் மரணம், காயம், எரிவு, கொலை முதலியன செவ்வாயின் தீச்செயல்களாகும்.

விசேடமாக பெண்களுக்கு செவ்வாய் ஒரு சாதகனாக அமையவேண்டும். இல்லாதிருந்தால் சிறு வயதில் அவர்கள் தீயினால் காயமுற நேரும். ஈரல் வீங்குவதாலும், எதிர்ப்புச் சக்தி குன்றுவதாலும் பிள்ளைகளை செவ்வாய் வளர்ச்சியடைய விடாது. பின்பு பராயமடைந்ததும் மாத விடாய் நேரங்களில் துன்பமடைய சந்திரனும் செவ்வாயும் காரணமாகும். தங்கள் பிள்ளையின் திருமண காலத்தில் சோதிடர்கள் எழுந்தமானமாக தமது விருப்பு வெறுப்பின்படி செவ்வாய் தோஷத்தை பெருமளவிலாக்கி அதற்கு கண், மூக்கு, காது மற்றும் அவயவங்களையும் உண்டாக்கி பெற்றோர்களை திண்டாட வைத்துவிடுவார்கள். இதனால் எத்தனையோ குமர்கள் கரை சேரா வண்ணம் சோதிடர்கள் தடுத்து வைத்திருக்கிறார்கள். திருமணத்தின் பின்பு சமாதானத்தையும், ஒற்றுமையையும் செவ்வாயே உண்டாக்கவேண்டும். மச்சான் மாரும், மச்சாள் மாரும், மாமன் மாமி மாரும் தம்பதிகளின் வாழ்வை சந்தோஷயீன மாக்கக் கூடாது. பெண்கள் வலிப்பாலும் மூர்ச்சை நோயாலும், அவதிப்படக் கூடாது. பெண் தாயாகப் போகும் காலங்களில் சலத்தில் அல்புமின் இருக்கக்கூடாது. பிள்ளைப்பேறு காலத்தில் சத்திர வைத்தியரின் உதவி கோரக்கூடாது. நிற்கரு இரத்தக் கசிவு முதலியன செவ்வாயால் உண்டாகும். சகோதரர்களுடன் நல்லுறவு, வீடு காணி கொள்வனவு செய்வதற்கு செவ்வாய் ஆட்சியும் சாதக வீடுகளையும் உறைவிடமாக்க வேண்டும். செவ்வாய் சாதகமாயிருப்பின் தான் விபத்து, காயம், அவமிருத்து வராமல் இருக்கும். இப்படி விசேடமாக பெண்ணினுடைய சாதகத்தில் செவ்வாய் பெலமாக நற்கதியடைய வேண்டும்.

பொதுவாக அரசன் அன்றறுப்பான் தெய்வம் நின்றறுக்கும். செவ்வாய் அரசர்கள் போல் செயற்படும். ஆனதால்தான் செவ்வாய் தோஷத்தைப் பற்றி எல்லோரும் பயப்படுகிறார்கள்.

(தொடரும்)

# இலங்கை - இந்தியப் பேச்சுவார்த்தைகள் பலனளிக்குமா?

இன்றைய அரசியல் சூழ்நிலையில் இலங்கை இந்திய சுதந்திர சாதகங்களை ஒப்பிட்டு நோக்கின் சில பல விளைவுகளை நாம் ஒருவாறு உற்றுணரக் கூடியதாக இருக்கின்றது. இதற்கு இருநாட்டின் சுதந்திர சாதகங்களை மட்டுமன்றி தலைவர்களின் சாதகங்களையும் நாம் ஆராய்தல் வேண்டும். இந்தியா சுதந்திரமடைந்த தினம் 15-08-1947 நடுநசி, இலங்கை சுதந்திரமடைந்த தினம் 4-2-1948 இவற்றிற்கான சாதகங்களை வாசகர்களின் ஆய்வுக்காகத் தருகின்றோம்.

| | | | |
|---|---|---|---|
| | | லக் ராகு 5 | யுரே 7 செ 2 |
| | இந்திய சுதந்திர சாதகம் பூசம் | | சந் 11 புத 14 சனி 20 சுக் 23 சூ 28 புளு |
| | | | |
| | கேது 5 | குரு 26 | நெப் |

| | | | |
|---|---|---|---|
| | ராகு 26 | யுரே | |
| புத 9 சுக் 27 | இலங்கை சுதந்திர சாதகம் அனுஷம் | | சனி 26 புளு |
| சூரி 20 | | | செ 10 |
| | சந் 11 குரு 28 | கே 26 லக் | நெப் |

இரு நாடுகளின் (சுதந்திர) லக்கினங்களும் ஒரே கிரகத்தின் (சுக்கிரன்) ஆட்சிக்குட்பட்ட வெவ்வேறான இராசிகளாக அமைந்திருப்பது நோக்கற்பாலது. இரு நட்சத்திரங்களும் (பூசம்/அனுஷம்) ஒரே கிரகத்தின் (சனி) ஆதிபத்தியத்திற்குட்பட்டன. இந்தியாவின் லக்கினத்தில் கரும்பாம்பு (ராகு) இருக்கின்றது. இலங்கையின் லக்கினத்தில் செம்பாம்பு (கேது) இருக்கின்றது. இரு நாடுகளுக்கும் ஒரே கிரகதசைகள் தொடர்ச்சியாக நடக்கின்றன. இவை காரணமாகவே இரு நாடுகளின் அரசியல் மாற்றங்கள், (குழப்பங்கள் உட்பட) ஒரே ரீதியில் இதுவரை காலமாக நடந்துவந்திருக்கின்றன. இதனை அரசியல் அவதானிகள் நன்கு உணர்ந்திருப்பார்கள்.

இப்போது இந்த இரு நாடுகளுக்குமுள்ள வேறுபாடுகளை கிரகரீதியாக ஆராய்வோம். இதற்கு நாம் இரு சாதகங்களையும் ஒன்றன்மேல் ஒன்றை இணைத்துப் பார்த்தல் அவசியம். இந்த இணைப்பில் அனேக முரண்பாடுகள் இருப்பதைக் காணலாம். இரு லக்கினங்களும் ஒன்றுக்கொன்று சட்ட, அட்டம (6,8) இராசிகளில் இருக்கின்றன. லக்கினாதிபதி சுக்கிரன் இரு இராசிகளிலும் ஒன்றுக்கொன்று சட்ட, அட்டம இராசிகளிலும் அம்சங்களிலும் இருக்கின்றன. சந்திரன் ஒன்றுக்கொன்று திரிகோண ராசிகளில் இருப்பது நன்று. சூரியன் ஒன்றுக்கொன்று எதிர்ராசிகளில் இருப்பது நன்றல்ல.

இலங்கைச் சாதகத்தில் செவ்வாய் இருக்கும் இடத்தில் சுக்கிரன் சஞ்சாரம் செய்தபோது உள்நாட்டுக் கலகங்கள் ஏற்பட்டன. இந்த இடம் லாபஸ்தானம். எனவே கைத்தொழில், பண்டகசாலைகள் அழிந்தன. 1983 டிசம்பரில் சுக்கிரன் லக்கினத்துக்கு 12-ல் நீச இடத்தில் சஞ்சரிப்பார். இந்த இடத்தை இந்திய சாதகத்தில் 7-ம் அதிபதியாக இருக்கும் செவ்வாய் 2-ல் யுரேனசுடன் இருந்து கேந்திரபார்வை பார்க்கிறது. இது நல்லதல்ல. இருநாட்டு சாதகங்களையும் ஒப்பிட்டு நோக்கும்போது அனேக கிரகங்கள் சட்ட, அட்ட, துவிதுவாதச, எதிர்ராசிகளிலேயே இருக்கின்றன. இவை அடிக்கடி பேதங்களையும், விரோதங்களையும் ஏற்படுத்தும்.

இருநாட்டு அதிபர்களின் சாதகங்களையும் ஆராயும்போது இலங்கை ஜனாதிபதியின் லக்கினம் கன்னியாக இருக்க, இந்தியப் பிரதமரின் லக்கினம் கடகமாக இருப்பது நன்று. ஆனால் இருவர் லக்கினாதிபதிகளும் சட்ட, அட்ட இராசிகளில் உள்ளன. மேலும் இந்தியப் பிரதமரின் தசா

நாதன் சனியும், இலங்கை ஜனாதிபதியின் தசா திபதி குருவும் ஒன்றுக்கொன்று 2, 12 ஸ்தானங்களில் இருப்பது விரும்பத்தக்கதல்ல. புத்தி நாதர்களும் செவ்வாயும், ராகுவும் 2,12 ஸ்தானங்களில் உள்ளன. இவையெல்லாம் ஜாதகர்களின் தொடர்புக்கு அன்யோன்யமாக அமைவது குறைவாகும், எனினும் இரு தலைவர்களும் மிக்க அவதானத்துடன் ஒற்றுமைக்கு வித்திட்டு விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையுடன் செயல்படுதல் யாவரும் விரும்பத்தக்கது.

## கார்த்திகைத் தீப மகிமை...!

(செல்வி தேன்மொழி அருளம்பலம்)

ஒளியின்றி மண்மீது வாழ்வுமுண்டோ - சூரிய
ஒளியின்றி இரவோடி விடிவதுண்டோ?
விழியின்றி ஒளிகாண முடிவதுண்டோ - அருள்
வழியின்றி அறம்சேர்க்க முடிவதுண்டோ?

நானென்ற அகந்தையும் வாழ்வதுண்டோ-நீல
வானின்றி மண்மீது மறையுமுண்டோ?
ஏனென்ற வினாவெப்போ பிறப்பதுண்டோ — மனிதன்
அவனென்ற பரம்பொருளை உணர்வனன்றோ!

அரிபிரமர் ஆணவம் கொண்டதினால் - ஈசன்
திரிலோக பெருஞ்சோதி ஆகிநின்றான்
சரிபாதி அடிமுடி தேடியோடி - பின்
சிரமமே அவர் கண்ட பிரம்ம சூத்திரம்.

கார்த்திகைத் தீபத்தின் தத்துவம் — இது
பார்மீது நாம் காணும் மகத்துவம்
சீரோங்கு மானிடப் பிறவியே — இதை
நீரென்றும் மறந்திட லாகுமோ?

ஆணவ மின்றிநாம் வாழுவோம் — என்றும்
மானமே பெரிதென்று கொள்ளுவோம்
சைவத்தின் நல்வழி பேணுவோம் - நம்
கைகளைத் துணைகொண்டு வாழுவோம்.

## விருச்சிக லக்கின ஆணும் மேட லக்கினப் பெண்ணும் சேர்வதால் ஏற்படும் பலன்கள்

வே. சின்னத்துரை - நல்லூர்

விருச்சிக ஆண் மேடப் பெண்ணை வென்றெடுக்க செய்யும் முயற்சிகளை பாராமுகமாயிருக்க மேடப் பெண்ணுக்கு மிகவும் தை[illegible]முண்டு. ஆனால் அவள் விட்டுக் கொடுக்கும் இயல்பு மிகவும் கடுமையாகப் பரீட்சிக்கப்படும். ஏனெனில் அவனுடைய விருப்புக்கு நேர்மாறான காரியங்களை அவனை விகாரப்படுத்துவதற்காக செய்ய தூண்டப்படுவாள். எல்லாக் கூட்டாளி முறையிலும் ஒற்றுமையை சம்பாதிக்க இக்கூட்டே மிகவும் கஷ்டமானதாகும். இதற்கு பிரதான தடையாயிருப்பது விருச்சிகத்தின் பொறுமையாகும். இக்குணம் இவரில் மிகவும் ஆழப் பதிந்திருப்பதினால் இவருடைய மனப்பான்மையை மாற்றலரிது. காதல் என்பது தெளிவாகக் காட்டப்பட்டாலும் தன்னைத்தானே விடுவிக்க காணும் விருச்சிக ஆளின் உணர்ச்சிகள் இவையாகும். இந்த ரகத்தை தப்பவிடும் பெண்ணுக்கு சோகம் தான். அவளுக்கு இருக்க வேண்டிய இலட்சியங்கள் சில அவனுக்குண்டு. நம்பிக்கைக்கு மோசடி நடக்குமானால் அவளைத் தன் மனத்திலிருந்து அகற்றிவிட்டு தன்னுடைய முழுக்கவனத்தையும் தனது தொழிலில் செலுத்துவான். குடும்ப சூழல், சுற்றுடலே அவனுக்கு மிகவும் முக்கியம். அதிலே தான் அவன் முழு உலகத்தையும் மறந்து முழு ஆறுதலடைவான். சீவியத்தை முழுக்க முழுக்க அனுபவிக்க வேண்டும் என்ற விருப்பு உள்ளதால் மேடப்பெண் இப்படி ஒரு பெட்டிப்பாம்புபோல் அடைபட்டிருக்க விரும்பமாட்டாள்.

இராசிமண்டலத்திலேயுள்ள இராசிகள் எல்லாவற்றிலும் விருச்சிகமே மிகவும் விசுவாசமுள்ள இராசி. ஆதலால் சீவியம் முழுக்க தோழமை கொண்டிருக்கும். ஆனால் மேட, விருச்சிக சோடி இதற்கு விதிவிலக்கானது.

பாலியல்பில் முற்றுமுழுதுமாக தானே வைத்திருக்கவேண்டும் என்றதினால் உரிமைக்கதிகமாகப் பெற எண்ணுவதினாலும் பொறாமைக் குணம் தலையெடுக்கும். இவர் இதை எவ்வளவு உக்கிரகமாக தேடுகிறாரோ அவ்வளவுக்கவ்வளவு அவள் முடிவில்லா விஷசுழல் சக்கரம் போல் ஓடுவாள். எந்த சூழலிலும் அவர் காமமிக்கவர், ஆனால் தகஅமைவில்லாதவர். இத் தோழமை கொஞ்சமாதல் நீடிக்கில்மேற்சொன்னவை ஒத்துக் கொள்ளப்படவேண்டியன.

# கிரக பார்வை

— வே. சின்னத்துரை, நல்லூர் —

சோதிட பலனுக்கு கிரக பார்வை முக்கிய அம்சம். கிரக பார்வை என்ருல் என்ன?

கெப்ளர் என்னும் வானசாஸ்திரி கூற்று:-
" An aspect is an angle formed on the Earth by the beams of two planets "

அதாவது; இரு கிரகங்களின் ஒளிகளால் உலகத்தில் உண்டாக்கப்படும் ஒரு கோணம்.

இதை சோதிடத்தில் ராசி மண்டலத்தில் இரு கிரகங்களின் ராசி ஸ்புடத்தில் பாகை, கலை என்பதால் அளக்கப்படும். இது இரண்டு கிரகங்களுக்கிடையேயும் உண்டாகலாம். அல்லது ஒரு கிரகத்திற்கும் இராசி மண்டலத்திலுள்ள ஒரு புள்ளிக்குமிடையே அளக்கலாம். இக்கோணங்கள் சில உணர்ச்சியில்லாததாகலாம்.

ஆனல் இந்து சோதிட மகாரிஷிகளின்படி இதை திருஷ்டிகள் என்றும் ராசிக்கு இராசி எண்ணி அறிதலுமாம். இத்திருஷ்டிகள் சாதகமானதா அல்லது பாதகமானதா என்பது இல்லை. இவை அதிபதித்துவம், கிரக சுபாவங்களைப் பொறுத்தன.

இதன்படி எல்லாக் கிரகத்திற்கும் 7-ம் பார்வை உண்டென்று முன்னேர் கூறினர்கள். மிதுனத்தில் உள்ள ஒரு கிரகத்திற்கும் தனுவில் உள்ள கிரகத்திற்கும் அவர்களுக்கிடையில் எத்தனை பாகையிருந்தாலும் 7-ம் பார்வை எனக் கொள்ளப்படும். மிதுனத்தில் புதன் 3 பாகை. மிதுனத்தில் வியாழன் 29 பாகை. இவர்களுக்கிடையில் 154 பாகை இருப்பினும் 7-ம் பார்வை தான். மிதுனத்தில் வியாழன் 3-ம் பாகையில் இருப்பின் இடைப்பாகை 180 ஆகும். இதுவும் 7-ம் பார்வைதான்.

சூரியன், சந்திரன், செவ்வாய், வியாழன், சனி, புதன்; வெள்ளி எல்லோருக்கும் 7-ம் பார்வை உண்டாம்.

இந்த 7-ம் பார்வையை விட எல்லாக் கிரகங்களுக்கும் ¼ பார்வையாக 3-ம், 10-ம் இடத்தையும் பார்க்குமென்பார்கள். ஆனல் சனியின் 3-ம், 10-ம் பார்வை தனது 7-ம் பார்வையிலும் பார்க்க உக்கிரமானதென்று சொல்வார்கள். அதே போல வியாழனுக்கும் 5-ம், 9-ம் பார்வைகள் 7-லும் பார்க்க உக்கிரமென்பார்கள். மற்றக் கிரகங்களுக்கும் 5-ம், 9-ம் பார்வையுண்டு. ஆனல் பெலனில்லை என்பார்கள். செவ்வாய்க்கு 4-ம் 8-ம் பார்வை 7-லும் பார்க்க வலுவுள்ளதென்பார்கள். மற்றக் கிரகங்களுக்கும். ¾ பார்வையாக 4-யும், 8-யும் பார்க்குமாம்.

பரிமல் புர்காயஸ்தர் என்னும் சோதிட விற்பன்னர் கூறுகிருர். ராகு 5, 9, 12-ம் பார்வையால் பார்க்குமென்றும் கேதுவுக்கு பார்வை இல்லை என்றும் பல தீபிகையில் மந்திரேஸ்வரர் சொல்கிருர். அத்தியாயம் 9-ல் ஸ்லோகம் 9-ல் எல்லாப் பார்வைகளிலும் பார்க்க 7-ம் பார்வை தான் முக்கியம் என்று. ஆனல் மற்றவர்கள் சொல்கிருர்கள் சனி, செவ்வாய், வியாழனின் விசேட பார்வைதான் முக்கியமென்று.

உத்தர கலாமிர்தத்தில் காண்டம் 2 சுலோகம் 17-ல் கூறப்படுகிறது. கிரகங்களுக்கு 2-ம், 12-ம், 6-ம் பார்வை இல்லை என்று.

இரு கிரகங்கள் ஒரே ராசியில் உறையில் அதை சமாகமம் என்பார்கள். உத்தரகலாமிர்தத்தில் காண்டம் 4-ல் சுலோகம் 32-ல் காளிதாசர் கூறுகிருர் இக்கிரகங்களுக்கிடையில் 12 பாகை வித்தியாசத்திற்குள் சமாகமம் நிகழும் என்று.

| | | | |
|---|---|---|---|
| சனி | | | ரா 11 |
| | | | |
| லக் சந் | | | வி 23 |
| 29 கே11 | | | 1 செ 11 வெ |

இச்சாதகத்தில் 7-ம் அதிபதி சந்திரன் மகரத்தில் நின்று தனது வீட்டை 7-ம் பார்வையாகப் பார்க்கிறது. பலன் கூறும்போது சந்திரனின் சுபாபத்தையும், ஆதிபத்தியத்தையும் சேர்த்துப் பலன் கூறவேண்டும்.

சனி மூன்றும் வீட்டில் நின்று 3-ம் பார்வையாக இடபத்தையும் 7-ம் பார்வையாக கன்னியையும், 10-ம் பார்வையாக தனுவையும் பார்க்கிறது. சனி செவ்வாயையும், வெள்ளியையும் 7-ம் பார்வையாகவும் கேதுவைப் 10-ம் பார்வையாகவும் பார்க்கும். இங்கு பார்க்கும் வீடு, அதன் அதிபதித்துவம், அங்கு உறையும் கிரகம் அவற்றின் தன்மை, ஆதிபத்தியம் அவை நிற்கும் நட்சத்திரம், முதலியவற்றைக் கணக்கில் எடுத்தே பலன் கூறவேண்டும்.

ஆனல் இச்சாதகத்தையும் விஞ்ஞான ரீதியில் ஆராய்ந்தால் செய்வாய்க்கும் கேதுவுக்குமிடையில் 90 பாகை. வியாழனுக்கும் கேதுவுக்குமிடையில் 108 பாகை. இங்கு 108-ப் பாகை சாதகமான பார்வையாக்க் கணிக்கப்படுகிறது. நற்பலன்களைக் கொடுக்க வல்லது. ஆனல் 90 பாகை கேந்திரம், அதோடு செவ்வாய் 4-ம் பார்வையாக கேதுவைப் பார்க்கிறது. ஆகையால் இது நன்மைஎன்றுமுடிவு. விஞ்ஞானிகளின் கூற்றுப்படி கேந்திரப்பார்வை கெட்ட பார்வை. அது துன்பத்தை விளைவிக்கும் என்பதாம். செவ்வாய் கன்னியில் 1-ம் பாகையில் நின்றல் கேது தனுவில் 29 பாகையில் நின்றல் இடைத்தூரம் 118 பாகையாகும். இரு திரிகோணப் பார்வைக்கு அண்மிக்கிறதாகையால் இது சாதகமான பார்வை என்பர்.

ஆகையால் தற்கால விஞ்ஞான ரீதியான பார்வைகளையும் படித்தல் நன்று. பார்வைகளில் நற்பார்வை, துற்பார்வை என இரண்டு வகையாகப் பிரித்துள்ளார்கள். நற்பார்வை நன்மைக்கு, அதாவது முன்னேற்றம், ஒன்றுமை முதலியன வற்றையும், துற்பார்வை வேற்றுமை ஒற்றுமையின்மை முதலியவற்றையும் காட்டும்.

அடுத்த இதழில் எதிர்பாங்கள்!

## வியாழ மற்றம்

உங்களுக்கு

## எப்படி.........?

சோதிடர் கவனத்திற்கு

# பொது நேரம்

ஒவ்வொரு ஊருக்கும் ஒரு பொது நேரத்தை அனுஷ்டிப்பதற்கு அந்தந்த நாடுகள் தத்தமக்கென ஒரு பொது நேரத்தை நியமித்திருக்கிறது. பெரிய பிரித்தானியா அல்லது ஐக்கிய ராஜ்ஜியம் Great Britain or U. K. 1880ம் ஆண்டு தொடக்கம் கிறீன்விச் என்னும் ஊரை மையமாகக் கொண்டு பொது நேரத்தை வைத்திருக்கிறது. இது 0 பாகை தேசாந்திர ரேகை ஊடாகச் செல்கிறது. இந்தப் பொது நேரத்தை வேறு பலநாடுகளும் பின்பற்றுகின்றன.

இதே போல எமது பொது நேரமும் இந்தியாவால் 1-10-1906 தொடக்கம் தேசாந்திர ரேகை கிழக்கு 82.30 பாகையில் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பொது நேரத்தை கீழ்க்காணும் நாடுகள் பின்பற்றுகின்றன.

இந்தியா
இலங்கை
பூட்டான்
நேபால்
அந்தமான் தீவு
நிக்கோபார் தீவுகள்.

அண்மையில் மலேசியாவில் ஒரு மாற்றம் உண்டாகியிருக்கிறது. அந்த நாடு முன்பு தமது பொதுநேரத்தை கிறீன் விச்சிலிருந்து 7-30 கூட்டி வழங்கிவந்தது. இந்தப் பொது நேரத்தை மலாயாவை அண்டின நாடுகளும். மலேசியாவும் சிங்கப்பூரும் வழக்கத்தில் வைத்திருந்தன. ஆனல் 1-1-82ம் திகதி தொடக்கம் மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் கிறின் விச்சிலிருந்து 8மணி கூட்டி வழங்கப்படுகிறது. அதை அவர்கள் புதிய மணி என்று வழங்குகிறுர்கள்.

தரமான படப்பிடிப்புக்கு

'சந்திரா போட்டோ'

(வெளிப்புறப் படப்பிடிப்பாளர்)

மட்டுவில் வடக்கு — சாவகச்சேரி

உரிமையாளர்: K. அருந்தவநாதன்

# கிரக சம்பாஷணை

அருள்

இடம்: விருச்சிக வீடு

[விருச்சிக வீட்டில் அதன் அதிபதி இல்லை. சூரியன், புதன், வியாழன், கேது, யுரேனஸ் ஆகியோர் அமர்ந்திருக்கிறார்கள். வீடு ஒரே மௌனமாகக் காணப்படுகிறது. நீண்ட மௌனத்தை விரும்பாதவராகக் குரு பகவான் பேச்சை ஆரம்பிக்கிறார்.]

வியாழன்: இராசி மண்டல நாயகன் சூரியதேவர் அவர்களே! மங்களமுண்டாகட்டும். தங்கள் சிந்தனை நீண்ட தூரம் செல்வதாகத் தெரிகிறதே! ஏன்?

சூரியன்: யார் குரு சிரேஷ்டரா? மங்களமுண்டாகட்டும். குருதேவரே! மௌனம் கலகநாஸ்தி என்பார்களே! அதேபோன்று நானும் மௌனமாக இருக்கிறேன். ஏன் நமக்கு அண்மையிலுள்ள புதன் கூட அப்படித்தானே. தங்கள் நிலையும் அப்படியென்றே யான் எண்ணுகின்றேன்.

வியாழன்: ஆமாம்! நான் மட்டுமல்ல. இங்குள்ள அனைவரும்தான் சிந்தனைக் குதிரைகளில் சவாரி செய்கிறார்கள். எங்கள் அனைவரின் சிந்தனைகளும் பூலோகத்தை நோக்கித்தானே பறக்கிறது.

சகலரும்: ஆமாம்! ஆமாம்!! குருசிரேஷ்டர் சரியாகவே சொல்லிவிட்டார்.

(மௌனம் நிலவிய விருச்சிகத்தில் தற்போது சற்றுக் கலகலப்பு ஆரம்பிக்கிறது.)

சூரியன்: குருசிரேஷ்டரே! இன்றைய பூலோக நிலையை அவதானித்தீர்களா? எங்கு பார்த்தாலும் பகைமை, விரோதம், விபத்துக்கள், சண்டைகள் போன்ற இன்னோரன்ன நிகழ்ச்சிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இந்நிலை மேலும் நீடித்துக்கொண்டு போனால் பூலோக மக்களின் நிலை என்னவது?

வியாழன: அடடா! என்ன இப்படிச் சொல்லிவிட்டீர்களே! எல்லாவற்றையும் வழிநடத்தும் ஆட்சி, அதிகாரம் தங்கள் கையில்தானே இருக்கிறது. ஆகவே நீங்களே பூலோகத்தில் சமாதானத்தையும், அமைதியையும், ஒற்றுமையையும் நிலைநிறுத்த ஏன் ஒரு வழிசமைக்கக் கூடாது.

சூரியன்: சமாதானம், ஒற்றுமை இவைபற்றி நான் நன்குணர்கிறேன். இருந்தும் அவற்றைச் சரியாக வழிநடாத்த ஏகோபித்த ஒத்துழைப்பு இல்லை. என்பது தங்களுக்குத் தெரியுந்தானே!

வியாழன்: எனக்கொரு சந்தர்ப்பம் கிடைக்குமானல் ஆஹா! தங்கட்கு பூரண ஒத்துழைப்பு நல்கி அமைதியை நிலைநாட்டுவேன். என்செய்வது! எனக்குத்தான் அந்தச் சந்தர்ப்பம் இல்லையே. ஏன் புதன் அவர்களே தங்கள் அபிப்பிராயம் என்னவோ?

புதன்: ஐயய்யோ! என்னைப்பற்றித் தங்களுக்குச் சந்தேகம் ஏன்? தங்கள் முயற்சிகளுக்கெல்லாம் பூரண ஒத்துழைப்புத் தருவேன். ஆனல் எம்மை அடுத்துள்ளவர்களிடம் நல்ல புத்தியை ஏற்படுத்த வேண்டியது பெரியோர்களாகிய தங்கள் கடமை.

சூரியன்-வியாழன்: அது யார் ஐயா அடுத்துள்ளவர்கள்? ஏதோ புதிர் போடுகிறீர்களே!

யுரேனஸ்: ஏதேது எங்களைப் பார்த்தால் தங்களுக்கு ஒரு மாதிரியாகத்தான் இருக்கிறது. எங்கள் வீர சூர தீரத்தனங்களைப்பற்றி தங்களுக்குத் தெரியவில்லையா? மலையைத் துளைப்பது சிற்றுளிதான் தெரியுமா? இது சிறிய கடுகுதான்; ஆனல் காரம் பெரியது. நெப்டியூன், கேது ஆகியோரின் பக்கபலமும் எனக்குண்டு.

வியாழன்: அப்படியானல் தங்கள் நோக்கம் என்ன என்பதை நான் அறியலாமா?

யுரேனஸ்: ஆஹா! தாராளமாகச் சொல்கிறேன். இப்பொழுதே இதே கிரகமண்டலத்திலே பார்த்தீர்களா? சிறுபான்மை, பெரும்பான்மை. இந்நிலை பூலோகத்திலும் ஏன் ஏற்படக்கூடாது?

வியாழன்: அப்படியானல் ... ... ...

யுரேனஸ்: நாம் சிறுபான்மையாக இருந்தாலும் எமது குரல்தான் ஓங்கியிருக்கிறது. நான் அதனைப் பகிரங்கமாகச் சொல்லவேண்டியதில்லை. மண்ணுலகில் எமது சகாக்களின் குரலை ஓங்கவைப்பேன்.

சூரியன்: அமைதி! அமைதி!! ஏன் இந்தப் பதட்டம். சற்று நிதானமாகப் பேசுங்களேன்! அதற்குள் என்னையேன் வீண் வம்புக்குள் இழுக்கின்றீர்கள்.

(29-ம் பக்கம் பார்க்க)

# சந்தேக நிவிர்த்தி

"மகம்"

சி. சுந்தரலிங்கம், மயிலிட்டி.

சந்: ஒரு ஜாதகர் பயங்கரவாதியாக அல்லது கொலைகாரனாக ஆவதற்குரிய கிரகநிலைகள் என்ன? ஒரு பயங்கரவாதி அரசியல் ரீதியில் அல்லது சமூக ரீதியில் அல்லது சுயநலரீதியில் செயற்படுகிறார் என்பதையும், சட்டத்தின் கைவசப்படுவார் அல்லது தப்புவார் என்பதையும் விளக்குக.

நிவி: இது ஒரு பாரதூரமான கேள்வி. சுருக்கமான வார்த்தைகளில் விளக்கிக்கொள்வது மிகக்கஷ்டம். இன்றைய சூழ்நிலையில் பயங்கரவாதி என்ற பதத்திற்கு பலவிதமான கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன. கருத்து வேறுபாடுகள் பார்க்கின்றவரின் கண்ணைப் பொறுத்தே அமைந்திருக்கும். பொதுவாக ஆராயுமிடத்து இலக்கினத்துக்கு 10ம் இடத்தில் பாபக் கிரகங்கள் சேர்க்கை இராகு அல்லது யுரேனஸ் சம்பந்தப்பட்டிருக்குமானல் அந்த ஜாதகர் பயங்கரமான கருமத்துடன் தொடர்பு கொண்டவராக இருப்பார். கிரகசேர்க்கையானது 8 பாகைக்குள் இருந்தால் மட்டுமே அவ்வாறு இருக்கும்.

இப் பாபக்கிரகங்களின் சேர்க்கை இலக்கினத்தில் அமைந்திருக்குமானல் பயங்கரவாதத்தால் ஒருவித தாக்கமடைவர். அல்லது சந்தேகம் காரணமாக அதிகாரிகளின் கண்ணில் படாமல் ஒழிவு மறைவாக இருப்பர்.

மேற்குறிப்பிட்ட பாபக்கிரக சேர்க்கையானது 7-ம் இடத்தில் இருக்குமாயின் ஜாதகர் தம்மைச் சேர்ந்தவர்கட்கு பயங்கரவாதத்தை விளைவிக்கக் கூடியவராக அல்லது அதற்கு ஏதுவாக இருப்பர்.

முக்கியமான கிரகங்கள் அல்லது லக்ன தசம கேந்திரங்கள் புளூட்டோ என்னும் கிரகத்துக்கு மிக அண்மையில் (அதாவது 2 பாகைக்குள்) அமையுமானல் ஜாதகர் அரசியல் புரட்சியில் அல்லது சமுதாயத்தில் ஏற்படும் புரட்சிகளில் ஈடுபடுபவராக இருப்பர்.

சட்டத்தின் கையில் அகப்படுவதும் அதனின்றும் தப்பித்துக் கொள்வதும் தசாபுத்திக் கிரமத்திலும் கோசாரக் கிரமத்திலும் ஆராய்ந்து கெட்ட கிரகங்களின் காலத்துக்குரிய தசை புத்தி அல்லது கோசார சஞ்சார காலத்தில் அகப்பட்டுக்கொள்ள வேண்டி நேரிடும் என்றும், நற்கிரகங்களின் தசைபுத்தி கோசர காலங்களாயின் தப்பித்துக்கொள்ள முடியும் என்றும் கொள்ளலாம்.

க. கந்தசாமி, பண்டத்தரிப்பு.

சந்: யுரேனஸ், நெப்டியூன், புளூட்டோ, ராகு, கேது ஆகிய கிரகங்கள் எவ்வெவ் ராசிகளில் ஆட்சிபெறுகின்றன?

நிவி: நீங்கள் குறிப்பிட்ட கிரகங்களுக்கு சொந்தமான இராசிகள் இல்லை. இவைகளின் தன்மைகளைப் பொறுத்து ஆட்சி இராசிகளை இன்றைய சோதிட உலகம் வகுத்துள்ளது. மேலைத்தேச சோதிடர்கள் யுரேனசுக்குக் கும்பத்தையும், நெப்டியூனுக்கு மீனத்தையும், புளூட்டோவுக்கு விருச்சிகத்தையும் ஆட்சி வீடுகளாக வழங்கியிருக்கிறார்கள். இராகு கேதுக்களைப் பொறுத்தமட்டில் நம்மவர்கள் பலவிதமாகக் கூறியுள்ளனர். சிலர் இராகுவுக்குக் கும்பத்தையும் கேதுவுக்கு மீனத்தையும் ஆட்சி வீடுகளாகக் கருதுகிறார்கள். வேறுசிலர் இராகுவுக்குக் கன்னியும், கேதுவுக்கு மீனமும் எனக் கூறியுள்ளனர். இன்னும் சிலர் இராகுவுக்கு சிங்கமும், கேதுவுக்கு கும்பமும் என வகுக்கின்றனர். இராசிகளின் தன்மைகளை நோக்குமிடத்து இராகுவுக்குக் கன்னியும், கேதுவுக்குத் துலாமும் வழங்குவது பொருத்தம் என எமக்குத் தோன்றுகிறது. கேது ஒரு கர்மக் கிரகம். கேதுவின் கண்ணைக்கட்டி தராசு வைத்துக் கொண்டிருப்பதாக சில கிரந்தங்களில் வர்ணித்திருக்கிறார்கள். இராகுவின் தன்மைகளைப் பொறுத்த மட்டில் கன்னிராசியின் (6-வது இராசி) தன்மைகள் பொருத்தமானதாகத் தெரிகின்றன.

க. சிவசுப்பிரமணியம், கல்முனை.

சந்: அந்நியதேச சஞ்சாரம், பயணம் முதலியவற்றைக் கொடுக்கும் கிரகங்கள் வீடுகள், இராசிகள் எவையெவை என்பதை விளக்குக.

நிவி: சிறுபிரயாணங்களை சந்திரன், புதனும்; நீண்ட பிரயாணங்களை குரு, நெப்டியூனும்; அந்நியதேச வாசத்தை சனி, ராகுவும் கொடுக்கும். இராசி பாவங்களில் 3-ம் வீடு சிறு பிரயாணங்களையும், 7-ம் வீடு சாதாரண பிரயாணங்களையும், 9-ம் வீடு நீண்ட பிரயாணங்களையும், 12-ம் 8-ம் வீடுகள் அந்நியதேச வாசத்தையும் கொடுக்கும். இராசிகளில் சரராசிகள் பிரயாணங்களையும், மீன விருச்சிகராசிகள் அந்நியதேச வாசத்தையும் கொடுக்கும்.

சி. லோகநாதன், திருகோணமலை.

சந்: வெள்ளம், பூகம்பம் போன்ற இயற்கைச் சேதங்களிலும், சனசமூக அரசியல் புரட்சிப்போர்களிலும், ஏகப்பட்ட மக்கள் இறக்கின்றுர்கள்; அவதிப்படுகிறுர்கள். இவர்கள் சாதகங்களில் எல்லாம் மரணமோ, சேதமோ குறிப்பிட்ட நேரத்தில், குறிப்பிட்ட ஏதுக்களால் நிகழுமென்று கூறக்கூடிய முறையில் ஒரேமாதிரி கிரகங்கள் அமைந்திருக்குமா? அப்படிக் கிரகங்கள் அமைந்திருப்பது சாத்தியப்படுமா?

நிவி: ஒரு நபரின் ஜனன ஜாதகத்தைக் கொண்டு அவரின் குணுகுண இயல்புகளையும், அவருக்கு ஏற்படும் சுபாசுப காலங்களையும். அவ்வக்காலங்களில் அவர் தமக்கு ஏற்படும் சந்தர்ப்ப சூழ்நிலைகளில் எவ்வாறு செயற்படுவார் என்றும் பூர்வீக கர்மப் பிரகாரம் என்னென்ன சம்பந்துக்கள் எவ்வெக் காலங்களில் ஏற்படும் என்பவற்றையும் ஓரளவு நிச்சயமாகச் சொல்லலாம். மரணத்தில் இயற்கை மரணம், செயற்கை மரணம் என இருவகை உண்டு. இதில் இயற்கை மரணத்தைக் கிரகங்கள் மூலம் அறிந்து கொள்ளலாம். அகால மரணத்தைக் கிரகநிலைகளால் அறிந்து கொள்வது அவ்வளவு சாத்தியமில்லை. மேற்குறிப்பிட்ட அகால மரணங்களுக்கு காரணம் குறிப்பிட்ட ஜாதகர் வாழும் சூழல், சமூகம், அரசு, நாடு முதலியவற்றை அனுசரித்ததாக இருக்கும். ஒரு நாட்டின் சாதகத்தில் அழிவைக் காட்டுமாயின் அந்நாட்டில் ஏற்படும் அழிவு சகல மக்களையும் பாதிக்கிறது. அப்பொழுது நல்ல சாதகமுள்ளவர்கள், கெட்ட சாதகமுள்ளவர்கள் என்பதைநோக்கி அழிவு செய்வதில்லை. நல்ல சாதகமுள்ளவர்கள் துன்பம் உணராது இறந்து நல்ல பதவியையடைவர் என்றே கொள்ளவேண்டும். குறிப்பிட்ட இடங்களில் சிலர் தெய்வாதீனமாகத் தப்பித்துக் கொள்வதும் உண்டு. இவற்றை கிரகநிலை கொண்டு விஞ்ஞானரீதியில் அறிவோம் என்று நினைப்பது தவறு. இனக்கலவரங்களில் எற்படும் பொருட்சேதம், உயிர்ச்சேதம் அடைபவர்களின் ஜாதகங்களில் நடப்பவற்றை ஒருவாறு முன்கூட்டி அறியக்கூடியதாக இருக்கும்.

ஒரு கலவரத்தில் சிலருக்கு ஒரே மாதிரிச் சேதம் ஏற்பட்டால் அவர்கள் ஜாதகத்தில் ஒரே மாதிரிக் கிரக தாக்கம் இருக்கும் என எதிர்பார்ப்பது பிழை. சேதங்கள் ஒரே மாதிரி ஏற்பட்டிருப்பினும் மனத்தாங்கல்கள் அவரவர் மனப்பாங்கைப் பொறுத்து வெவ்வேறு விதமாக இருக்கும். மனத்தாக்கங்களின் தரத்தை மாத்திரமே கிரக சேர்க்கையோ, கிரக திருஷ்டியோ காட்டும்;

---

கிரக சம்பா...... (27-ம் பக்கத் தொடர்)

யுரேனஸ்: யார் எது சொன்னுலும் நான் எதற்கும் அஞ்சமாட்டேன். ஒரே எதிர்ப்பு. யார் என்ன சமாதானம் கூறினுலும் எனது வேலையை நான் செய்தே தீருவேன். யார் யார் எங்கெங்கு நின்று சொன்னுலும் அடிதடி, வெடிவிபத்து, வன்செயல், விபத்து இவற்றை நான் கைவிடப் போவதில்லை. கேதுவும் எனக்கு உதவி புரிவாரென நம்புகிறேன்.

கேது: யுரேனஸ் அவர்களே! சற்று நிதானமாக இருங்கள். நான் உங்களுக்குப் பக்கபலமாகத்தான் இயங்குவேன். எனக்கு அதிகாரமுள்ள தொற்று நோய்களையெல்லாம் கட்டவிழ்த்துவிடுவேன். இந்நோய்கள் மனிதர்களுக்கு மட்டுமல்ல பயிர்களுக்கும் ஏற்படும் என்பதை மறந்துவிடாதீர்கள்.

புதன்: சுக்கிர பகவான் அவர்களும் எட்டத்தில் நிற்பதால் வரண்ட பிரதேசங்களில் மேலும் வரட்சி ஏற்படுமோ?

சூரியன் - புதன்: ஐயய்யோ! போதும் போதும். அணுக்குண்டைப் போடவேண்டாம். அவரவரும் உங்கள் உங்கள் அறிவுக்கும், சக்திக்கும் ஏற்றபடி செய்யுங்கள். நாங்கள் விரைவில் அடுத்த வீட்டுக்குப் போய்விடுவோம். குரு பகவான் எல்லாவற்றையும் நல்வழிப்படுத்திக்கொண்டு வருவார் என நம்புகிறோம். தொடர்ந்து சம்பாஷிக்க விரும்பவில்லை. வருகிறோம், வணக்கம்.

---

காட்சிக்கும் பலனுக்கும் சரிவருவது

"திருக்கணித பஞ்சாங்கம்"

## ஜாதகம் 46 பெண்

| | | | |
|---|---|---|---|
| சந் | | ராகு | லக் |
| | கிரகநிலை | | சனி |
| | | | |
| | சூ செ,கே | பு,சுக் வியா | |

பிறந்த திகதி: 03-12-1946
நேரம்: 8-36 P. M.
நட்சத்திரம்; உத்தரட்டாதி

உயர் சைவ வேளாளர் குலத்தை சேர்ந்த, சைவ உணவாளியான இப்பெண் க.பொ.த. உயர்தரம் வரை ஆங்கில மொழியில் படித்தவர். வலி-கிழக்கு M. P. C. S-ல் லிகிதராக் கடமை புரிகிறுர். இவருக்கு சீதனமாக கோப்பாய் தெற்கில் 3½ பரப்பு காணியும், ரூபா 25,000 உம் நகையும் கொடுக்கப்படும். தகுந்த மணமகன் தேவை.

## ஜாதகம் 47 பெண்

| | | | |
|---|---|---|---|
| | சூ, பு வெ | கே | லக் |
| | கிரகநிலை | | சந் |
| செ | | | வி |
| | சனி ரா | | |

பிறந்ததிகதி: 18-04-1956
நேரம்: 10-45 A. M.
நட்சத்திரம்: பூசம் 2-ம் பாதம்

க.பொ.த உயர்தரம் வரை படித்த இப்பெண் கொக்குவில் தொழில் நுட்ப கல்லூரியில் தேசிய வர்த்தகத்துறை டிப்ளோமா செய்தவர். இவருக்கு சீதனமாக சுதுமலேயில் 2½ பரப்புக் காணியில் புதிதாக கட்டப்பட்ட வீடும், 16 பவுண் நகையும், பணம் 1, 00, 000/- உம் கொடுக்கப்படும். சைவ உணவாளியான மணமகன் தேவை.

## ஜாதகம் 48 ஆண்

| | | | |
|---|---|---|---|
| சூ,பு சனி | சந் கே | லக் | |
| குரு சுக் | கிரகநிலை | | |
| | | | |
| குஜ | | ரா | |

பிறந்த திகதி: 25-03-1939
நேரம்: 10-10 A. M.
நட்சத்திரம்: கார்த்திகை

இவர் சவூதிஅரேபியாவில் உள்ள பெரிய கொம்பனியில் வாகனம் ஒழுங்குசெய்தல் மேற்பார்வையாளராக கடமை புரிகின்ருர். தகுந்த மணமகள் தேவை.

# ★ மணப்பந்தல் ★

## ஜாதகம் 49 பெண்

| | | | |
|---|---|---|---|
| | லக் ரா | | |
| சூ செ | கிரகநிலை | | |
| பு வெ | | | சனி |
| குரு சந் | | கே | |

பிறந்ததிகதி: 22-01-1950
நேரம்: 11-00 A. M.
நட்சத்திரம்: பூராடம் 2-ம் பாதம்

கோவிய வகுப்பை சேர்ந்த இப் பெண் மகா வித்தியாலயம் ஒன்றில் கலைப்பட்டதாரியாக கடமையாற்றுகிருர். இதே மரபிலுள்ள நற்குணமுள்ள, பிறந்த எண் 1,7 ஆக இருக்கும் வரன் விரும்பத்தக்கது. வீட்டுடன் வரனின் தொழிலுக்கு ஏற்ற சீதனம் வழங்கப்படும்.

## ஜாதகம் 50 பெண்

| | | | |
|---|---|---|---|
| | ரா | புத | லக் சூ, சு |
| | கிரகநிலை | | சனி |
| | | | செ |
| சந் குரு | | கே | |

பிறந்ததிகதி: 23-06-1948
நேரம்: 6-02 A. M.

நட்சத்திரம்: பூராடம் 4-ம்பாதம்

சைவ வேளாண்குல சுத்த போசனமுடைய அழகும், உயர் கல்வியும், நற்குணமும் உள்ள இப்பெண்ணுக்கு நல்ல மரபிலுள்ள சுத்த போசனமுடையவரும், நல்ல தொழிலுமுள்ள மணமகன் தேவை. வீடு, வளவோடு 1 லட்சம் ரூபா ரொக்கமும், வரனின் தொழிலுக்கேற்ற சீதனமும் வழங்கப்படும். வரனின் பிறந்த எண் 1, 3, 5, 6, 9 ஆக இருப்பது விரும்பத்தக்கது.

## ஜாதகம் 51 பெண்

| | | | |
|---|---|---|---|
| | | சனி செ | |
| சந் | கிரகநிலை | | ரா |
| கே | | | லக் வி |
| சூ புத | வெ | | |

பிறந்த திகதி: 30-12-1943
நட்சத்தி.: அவிட்டம் 3-ம் பாதம்

சிறப்புப்பட்டம் பெற்ற பட்டதாரியான இப்பெண் ஆசிரியையாக தொழில் புரிகிருர். வேதனம் 1200/- சீதனமாக நகையும், பணமும் கொடுக்கப்படும். தகுந்த மணமகன் தேவை.

விபரங்கட்கு:- திருக்கணித நிலையம், மட்டுவில், சாவகச்சேரி.
பதிலுக்கு முத்திரை, கடித உறை அனுப்பவும்.

வாசகர் கருத்து

## "ஆய்வுக் கண்ணோட்டம்"

திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன எனும் தலையங்கத்தில் 'பவானி' எழுதும் கட்டுரை விளக்கங்கள் அதிகமாக KP முறையிலேதான் அமைகின்றன. அதேபோன்று திரு. வி. எஸ். வி. அவர்கள் எழுதிவரும் திருமணம் தடைபடுவதேன் என்னும் கட்டுரையிலே (சோதிட மலர்-1983 புரட்டாதி வெளியீடு) பத்ததிமுறையை குறை கூறுவது போன்று அதில் ஒன்றும் புதுமையில்லை என்று கூறியுள்ளார். KP முறையிலே சுலோகங்களை மனப்பாடம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. இது ஒரு புதுமைதான். திருமண விடயங்களை KP முறையிலே 2ம் 7ம் 11ம் வீடுகளையும், அல்லது 4ம் 7ம் 6ம் 10ம் வீடுகளைக் கொண்டும் ஆராய முடியும். 7ம் வீடு களஸ்திரம் 2ம் வீடு குடும்பம், 11ம் வீடு நீடித்த நட்பு - இன்பம் என்பவற்றைக் குறிக்கும். 6ம் 10ம் வீடுகள் முறையே 7ம் 11ம் வீடுகளுக்கு 12ம் வீடாகி விரயஸ்தானமாகின்றன. அதுபோன்று 5ம் வீடு ஒருவனுக்கு மணப்பந்தத்தினால் கிடைக்கும் பிள்ளைகளைக் குறிப்பிடும். எனவே 5ம் வீட்டுக்குப் 12ம் விரய-ஸ்தானமாக 4ம் வீடு அமைகின்றது. இது KP முறையாகும். அது போன்று மரபுவழி முறையின்படி 2ம் 7ம் அதிபர்கள் களத்திரகாரனாகிய சுக்கிரனுடன் கூடியோ தனித்தோ மறைவுத்தானங்களாகிய 3, 6, 8, 12ம் வீடுகளில் இருப்பின் நிச்சயமாக திருமணம் இல்லை என்பதாகும். KP முறையோ அல்லது மரபுமுறையோ ஒரு வாயிலின் உள்ளே திறந்திருக்கும் இரட்டைக் கதவுகள்- ஆனால் ஒவ்வொருவரும் தத்தமது விருப்புப்படி ஒற்றைக் கதவை மூடிவிட்டு மற்றய பகுதியை திறந்து கொண்டு செல்கின்றனர். ஆனால் இருபகுதியினரும் ஒரு விஞ்ஞான மண்டபத்தினுள்ளேதான் செல்கின்றனர் என்பது எனது கருத்தாகும். இதற்கு மேற்கோளாக ருதிரோற்காரி வருட புரட்டாதி மாத 'சோதிட மலரில்' வெளியாகிய இரு ஜாதகங்களையும் எடுத்து விளக்க விரும்புகிறேன்.

பவானி அவர்களால் தரப்பட்ட 1935-11-10 பிறந்த ஜாதகியின் ஜாதகப்படி 2ம் அதிபதி 7ம் அதிபதியாகிய செவ்வாய் மறைவுத் தானமாகிய 3ம் தனுவில் இருக்க, களத்திரகாரகன் சுக்கிரன் அட்டமாதிபனாகி 12ம் மறைவுத்தானமாகிய கன்னியில் இடம்பெற்றிருப்பதும், 12ம் வீட்டுக்குள் வருவதும் — இச் சாதகிக்கு நிச்சயமாக திருமணம் இருக்கமுடியாது என்பதை மரபு வழிப்படி கூற முடியும்.

அதுபோன்று இதே சோதிட மலரில் "திருமணம் தடைப்படுவதேன்" என்னும் கட்டுரையில் காட்டியுள்ள ஜாதகத்தில் 4ம் அதிபன் சுக்கிரன் ஆறும் அதிபன் குரு, பத்தாதிபன் செவ்வாய், மூன்றுதிபதி பன்னிரண்டாதிபதி புதன் சகிதம் இலக்கினத்தில் அமர்ந்து 7ம் வீடாகிய மகரத்தை நோக்க ஏழாதிபதி சனி 4ல் உச்சம்பெற்று பலமடைந்துள்ளது. 7ம் பார்வையால் 10ம் வீட்டை நோக்குவதும் ஆறுதிபதி குரு பத்தாதிபன் செவ்வாயுடன் 4க்குப் பத்தாம் வீடாகிய கற்கடகத்தில் நிற்பதும் KPயின் முறைப்படி திருமணம் இல்லை என்றே நிச்சயிக்கவேண்டியுள்ளது.

மேலும் இதே சோதிட மலரில், மணப்பந்தல் பகுதியில் வெளியிட்டுள்ள 43ம் இலக்க ஜாதகத்திலும் இரண்டாதிபன் சுக்கிரன் ஏழாதிபன் குருவுடன் 6ம் மறைவுஸ்தானத்தில் இருப்பதும் ஆறுதிபன் சனி 12ல் விரயத்தில் இருந்து வருவதும் திருமணம் தடைப்படும் என்பது எனது கருத்து. நவீனமோ, மரபுவழியோ கிரகங்கள் விஞ்ஞான உண்மையை இயம்புகின்றன. எனவே இவ் உண்மையை வளர்க்க முற்படுவோம். பேதம் நமக்குள் எதற்கு.

ஒஸ்மாகபூர் - யாழ்ப்பாணம்.

## திருக்கணித பஞ்சாங்கம் பற்றி

1982-ல் சனி மாற்றம் புரட்டாதி 6-ம் திகதி என "திருக்கணிதத்தில்" குறிப்பிடப்பட்டிருந்தது. "வாக்கிய பஞ்சாங்கத்தில்" வேறு திகதி குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் புரட்டாதி 6-ம் திகதியே எனது வாழ்வில் மறக்க முடியாத சம்பவம் ஒன்று ஏற்பட்டு தொழில் ரீதியாக பாதிக்கப்பட்டேன். இப்படி "திருக்கணிதத்தில்" குறிக்கப்படும் கிரக மாற்ற தினங்களைக் கொண்டு ஒருவருடமாக கவனித்து வந்ததோடு அதன்படி வெற்றிலை ஆரூடம் போன்ற சோதிடக் கணிப்புகளைச் சொன்னபோது அது சரியாக இருந்து வந்ததை நான் அனுபவத்தில் அறிந்து கொண்டேன்.

சிவஸ்ரீ க. லோகநாதக் குருக்கள்
திருப்பனங்காடு.

# குறுக்கெழுத்துப் போட்டி

## இல. 19

### முதலாம் பரிசு ரூ. 50/-

**போட்டி நிபந்தனைகள்**

1. கீழ்வரும் சதுரத்தைப் பூர்த்தி செய்து உங்கள் பெயர், முகவரியையும் எழுதி தபாலட்டையில் மட்டும் ஒட்டி அனுப்பவேண்டும்.
2. 1-12-1983க்குப்பின் கிடைக்கும் விடைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
3. சரியான விடையை அனுப்பி தேர்ந்தெடுக்கப்படும் முதலாவது அதிஷ்டசாலிக்கு ரூ. 50/- இரண்டாவது அதிஷ்டசாலிக்கு 6 மாத சோதிடமலரும், மூன்றாவது அதிஷ்டசாலிக்கு 3 மாதச் சோதிடமலரும் இனாம்.
4. போட்டி ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

விடைகள் அனுப்பவேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல. 19
சோதிடமலர்
மட்டுவில் — சாவகச்சேரி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இ 1 | 2 | 3 | பா 4 | 5 | 6 |
| 7 | ■ | 9 | 10 | 11 | ல் 12 |
| ந் 13 | 14 | கா 15 | 16 | ■ | 18 |
| 19 | ■ | 21 | த 22 | 23 | 24 |
| ■ | 26 | ம் 27 | 28 | 29 | ■ |
| 31 | 32 | ■ | 34 | ப 35 | 36 |

பெயர் ஸ்ரீவத்ஸலாதேவி முத்தக்கிளை

விலாசம் கோராலத்தை
சுன்னாகம்.

**இடமிருந்து வலம்**

1. இராசிநிலையில் குறிப்பிட்ட ஸ்தானங்களில் குறிப்பிட்ட பாவக்கிரகங்கள் நிற்பதனால் இது ஏற்படும்.
9. விளக்கை நாடி ஓடும் ஓர்வகைப் பூச்சியினம் மறைந்து காணப்படுகிறது.
13. குழம்பியிருக்கும் இது உலோகப் பொருட்களைக் கவரும் தன்மை வாய்ந்தது.
21. நடனக்கலையொன்றின் முதலெழுத்து இறுதியில் காணப்படுகிறது.
26. இதிலிருந்து அயனம்சத்தைக் கழிக்க நிரயனம் கிடைக்கும். குழம்பியுள்ளது.
31. தன்மைப் பன்மைப் பெயர்.
34. கார்த்திகைத் தீபநன்னாளின்போது இல்லங்களை இதனைக்கொண்டு அலங்கரிப்பார்.

**மேலிருந்து கீழ்**

1. கிரகங்களின் சுற்றோட்டப் பாதையை...... விருத்தம் என்று கூறுவர்.
3. வழமையான பாவிப்பில் இதன் மூலம் பெறப்படும் நேரம் அந்தந்த நாடுகளுக்குரிய பொது நேரமாகும்.
4. ஒழிந்திருக்கும் யோகத்தைக் கண்டுபிடியுங்களேன்.
5. 'என்ன' என்ற வினாவின் ஆங்கிலப்பதம் இது.
6. அல்லி, தாமரை வகையைச் சார்ந்த ஓர் பூவினம் குழம்பியுள்ளது.
23. முனிவர்களின் கோபத்திற்குள்ளானவர்கள் பலர் இதற்கு இலக்கானார்கள். குழம்பியுள்ளது.
26. இராசியொன்றின் முதலெழுத்துத் தவறிவிட்டது.

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 18ன் விடைகள்**

இடமிருந்து வலம்

1. சித்தாம்சம் 9. மரணம் 13. சங்கமம் 19. கதர் 23. ரதி 25. (தே)தள் 28. சகதி 31. பத்திரை.

மேலிருந்து கீழ்

1. சதுர்த்தசி 3. தாமதம் 4. கணம் 5. சமரசம் 6. (க)ரம் 14. திங்கள் 24. திகதி 28. கரை

பரிசு பெறுவோர்:

1-ம் பரிசு; ஆர். சுகந்தி
''சோபனம்''
பலாலி றோட், திருநெல்வேலி.

2-ம் பரிசு: ந. பொன்னம்பலம்,
''தங்கவாசம்''
மல்லாகம்.

3-ம் பரிசு: வ. தி. ராஜாராம்,
''பிருந்தாவனம்''
ஆத்தியடி, பருத்தித்துறை.

யாவரும் விரும்புவது! "மில்க்வைற் நீலசோப்" தரத்தின் சின்னம்!!

## பளிச்சிடும் வெண்மைக்கு "மில்க்வைற் நீலசோப்"

தந்தி: மில்க்வைற்




தொலைபேசி: 23233

# மில்க்வைற் தொழிலகம்

யாழ்ப்பாணம்

---

## வர்த்தக ஸ்தாபனங்களின்

## விற்பனையைப் பெருக்கிடும் விளம்பர சேவை

★ அறிவிப்பாளர்: மேஜர் ஷண் ★

MANIKKURAL

# மணிக்குரல் விளம்பர சேவை

பஸ் நிலையம் — யாழ்ப்பாணம்

Registered as a News Paper at the G. P. O. Sri Lanka.


# சோதிட அன்பர்களுக்கு நற்செய்தி

| | | | |
|---|---|---|---|
| 1. | ஜாதகக் குறிப்பு: கிரகநிலை, நவாம்சநிலை, மகாதசை அடங்கியது .... .... .... | ரூபா | 15-00 |
| . | ஸ்புட ஜாதகக் குறிப்பு: ஷை விஷயங்களுடன் கிரகபாவ ஸ்புடங்கள் அடங்கியது .... .... | ,, | 30-00 |
| 3. | ஷை ஜாதகக் குறிப்பு பிற நாட்டுக்கு எழுத .... | ,, | 50-00 |
| | ஷை ஜாதகக் குறிப்புக்கு ஒரு வருடபலன் எழுத .... | ,, | 20-00 |
| | மேலதிக ஒவ்வொரு வருடத்துக்கும் .... .... | ,, | 15-00 |
| 4. | ஜாதகம்: கிரகஸ்புடம், பாவஸ்புடம், இராசிவர்க்கங்கள், மகாதசை விபரம் முதலிய கணிதங்களுடன் ஆயுள், பிதா, மாதா, தனம், சகோதரம், சந்தானம், கல்வி, தொழில், விவாகம், ஆரோக்கியம், பிரயாணம் முதலியனவற்றின் பொதுப்பலன்களும், தசாபலன்களும் எழுத .... .... .... | ,, | 250-00 |
| 5. | ஆயுள் ஜாதகம்: மேற்கூறப்பட்ட சகல விஷயங்களுடன் ஆயுள்வரை பலனெழுத .... .... | ,, | 1000-00 |
| 6. | விவாகப் பொருத்தம் பார்த்து நிச்சயிக்க .... | ,, | 25-00 |
| | **கேள்வி - பதில்** | | |
| | கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்க .... .... | ,, | 15-00 |
| | மேலதிக ஒவ்வோர் கேள்விக்கும் .... .... | ,, | 10-00 |

ஜாதகர் பிறந்த ஊர், வருஷம், மாதம், திகதி, நேரம், ஆண், பெண் ஜாதகர் பெயர் முதலிய விபரங்களைக் குறித்து, மேல் காணப்படும் ஜாதக வகையில் எது வேண்டுமோ அதற்குரிய பணத்தையும், தபாற் செலவு ரூபா 2-50-ம் முற்பணமாகவே கீழ்க்குறிப்பிடும் விலாசத்திற்கு அனுப்பிவைக்க வேண்டும். ஆடர்கள் கிடைத்த ஒழுங்கின்படியே எழுதி அனுப்பிவைக்கப்படும்.

நேரடியாகப் பலாபலன் ஆராய்வதற்கு வருபவர்கள் கீழ்க்குறிப்பிடும் அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை தவிர்ந்த ஏனைய நாட்களில் (காலை 9 மணிமுதல் மாலை 6 மணிவரை) வந்து தமது சந்தேகங்களை நிவிர்த்தி செய்து கொள்ளலாம்.

முகவரி:

**திருக்கணித நிலையம்**

(சோதிடப் பகுதி)

கண்டி வீதி — கோட்டடி — சாவகச்சேரி


Edited by K. Sathasiva Sarma; Printed and Published by S. Sethambaranatha Kurukkal Thirukkanitha Nilayam, Madduvil, Chavakachcheri, Sri Lanka. Phone: 380